RE/MAX REALTOR BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 25 ஆகஸ்ட் 2023 இதழ்:- 15

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com


Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

## 3 தமிழர்கள் படைத்த சாதனை
## சந்திராயன்3:- நிலாவை முத்தமிட்டது இந்தியா!

23 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை மாலை இந்திய நேரப்படி 6:04 மணிக்கு இந்தியாவின் சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலாவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. நிலாவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது. நிலவில் தரையிறங்கிய இடத்தைப் புகைப்படம் எடுத்து (14ம் பக்கம் பார்க்க)



## குருந்தூர்மலையைச் சாட்டாக வைத்து இனக்கலவரம்! இந்தியப் புலனாய்வு அமைப்புகளின் எச்சரிக்கை

ஈழநாடு மின்னிதழ்
eelanadu.ca

## கொழும்பில் கஜேந்திரகுமாரின் வீடு முற்றுகை? சிங்கள இன வெறியர்களுக்கு அழைப்பு!



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பில் உள்ள வீட்டின் முன்பாக இந்த வாரம் முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்குமாறு இலங்கையின் கடும் போக்குவாத அரசியல் கட்சியான பிவித்துறு ஹெல உறுமய அழைப்பு விடுத்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சிங்களவர்களின் உரிமைகளை (5ம் பக்கம் பார்க்க)



## குருந்தூர்மலை விவகாரம்:- அரசின் நீண்டகால நிகழ்ச்சி நிரலிற்கு மறவன்புலோ சச்சிதானந்தன் துணை! அம்பிகா சற்குணநாதன் சாடல்

## குருந்தூர்மலையில் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தார்களா? தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதுவே உண்மை என்கிறார் சியம்பலாகஸ்வெவ தேரர்!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! 25 முதல் 31 வரை உணவளிக்க முன் வாருங்கள்!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF
## SELLING OR BUYING A HOME?

# www.AgentSiva.com
*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com




20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd

**Oshawa** **$314,900**
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Tecumesh Rd E & Hall Ave

**Windsor** **$349,000**
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors

### Markham & Eglinton

**Scarborough** **$529,900**
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St

**Mississauga** **$599,000**
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Bramalea Rd & Queen St

**Brampton** **$590,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement

### Lawrence & Morningside

**Scarborough** **$629,900**
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### York St / Bremmer Blvd

**Toronto** **$610,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station

### Markham Rd & Denison

**Markham** **$635,999**
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

### Taunton & Ritson

**Oshawa** **$699,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home

### Main St. E & Russell St.

**Southgate** **$999,000**
Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home

### Meadowvale & 401

**Scarborough** **$995,000**
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

### Brimley Rd / St. Clair Ave

**Scarborough** **$1,224,900**
Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms

### Meadowvale / 401

**Scarborough** **$1,799,995**
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Bayview & Major Mac

**Richmond Hill** **$1,499,900**
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

### 9th Line/14th Ave

**Markham** **$1,799,000**
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home

### Commercial/Retail


**Grey Highlands** **$7,200,000**
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


# குருந்தூர்மலையைச் சாட்டாக வைத்து இனக்கலவரம்! இந்தியப் புலனாய்வு அமைப்புகளின் எச்சரிக்கையை அலட்சியம் செய்ய வேண்டாமென உத்தரவு!

குருந்தூர் மலையை அடிப்படையாக வைத்து எவ்வேளையிலும் இனக்கலவரம் மூளலாம் என்ற இந்திய புலனாய்வு பிரிவிரின் எச்சரிக்கையை அலட்சியம் செய்யவேண்டாம் என உள்நாட்டு புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளதாக ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு குருந்தூர்மலையை அடிப்படையாக வைத்து இனக்கலவரத்தை தூண்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினர் மற்றும் தனிநபர்கள் குறித்து தகவல்களை திரட்டுமாறும் எச்சரிக்கையாகயிருக்குமாறும் உள்நாட்டு புலனாய்வு அமைப்புகள் தங்கள் புலனாய்வாளர்களுக்கு உத்தர விட்டுள்ளன என ஐலண்ட் தெரிவித்துள்ளது.

குருந்தூர் மலை தொடர்பில் உடனடி மதக்கலவரம் சாத்தியம் என்ற இந்திய புலனாய்வு பிரிவினரின் எச்சரிக்கையை தொடர்ந்தே உள்நாட்டு புலனாய்வு அமைப்புகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

குருந்தூர் ஆலய பகுதியினை உரிமை கொண்டாடுவதற்காக பௌத்த இந்து உணர்வுகளை பயன்படுத்தும் அனைத்து தரப்பினரையும் கண்காணிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு புலனாய்வு பிரிவுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என ஐலன்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மீண்டும் இனக்கலவரத்திற்கான வலுவான வாய்ப்புகள் உள்ளன இந்த வன்முறைகள் 2019 தேர்தலிற்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைகளை விட மோசமானவையாக காணப்படலாம் என இந்திய புலனாய்வு பிரிவினர் விடுத்துள்ள எச்சரிக்கையை இந்திய பத்திரிகைகள் சில வெளியிட்டுள்ளன.

# மட்டக்களப்பு எல்லைக்குச் சென்று திரும்ப முடியாத தமிழர்கள்! மும்மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்களைச் சிறை பிடித்த பிக்கு!



மட்டக்களப்பு நகருக்கு மேற்கே 45 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள தமிழர்களின் பாரம்பரிய காணிகளான கால் நடை வளர்ப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மயிலத்தமடு மாதவனை பகுதிகளுக்கு தமிழர்களால் சென்று திரும்ப முடியாத நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

22.08.2023 செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள கால் நடை பண்ணையாளர்களை சந்தித்து கலந்துரையாடுவதற்காக சென்று திரும்பிய மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தினை சேர்ந்த மும்மத தலைவர்களையும் அவர்களுடன் சென்ற ஊடகவியலாளர்களையும் அந்த பகுதியில் செயற்படும் பௌத்த பிக்கு தலைமையிலான சட்ட விரோத காணி அபகரிப்பாளர்களினால் சுமார் நான்கு மணி நேரம் சிறைப் பிடிக்கப்பட்ட சம்பவமானது ஒட்டு மொத்த மட்டக்களப்பு மாவட்ட சமூகமும் வெட்கித் தலைகுனிய வேண்டிய சம்பவமாக பார்க்க வேண்டியுள்ளது.

ஒரு மாவட்டத்தின் மூன்று சமயப் பெரியார்களையும் ஒரு பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினர் சிறைப் பிடித்து வைத்து கொண்டு இலங்கையின் பாதுகாப்பு தரப்பினர், நீதிமன்ற சட்டங்களுக்கு சவால் விடும் நிலையில் பௌத்த பிக்கு ஒருவர் செயற்படும் போது பிடித்து வைக்கப்பட்டவர்களை மீட்டெடுக்க வந்த பொலீஸ் உயர் அதிகாரிகள் பிக்குவி காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்ற விதம் இந்த நாட்டில் பௌத்த மதத்தவரை தவிர வேறு எந்த மதத்தவருக்கும் பாதுகாப்போ நீதியோ கிடைக்காது என்பதையே மிக ஆழமாக பதிவு செய்திருந்தது.

இந்த சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்காலம் குறித்து மாத்திரம் அல்ல மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 74 வீத பெரும்பான்மை தமிழர்களினது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் அவர்கள் வாழ்வதற்கான சுதந்திரம் குறித்தும் ஆயிரம் ஆயிரம் கேள்விகளை எழுப்பி இருந்தது.

சம்பவ தினம் பிக்கு மற்றும் அவர்களுடன் வந்த சிங்கள காடையர்கள் செயற்பட்ட விதம், அவர்கள் இந்து குருக்களின் கொண்டையை பிடித்து இழுத்தமை, மதகுருமார் சென்ற வாகனத்தை தடுத்து நிறுத்தி சாரதிக்கு அடிக்க சென்றமை, வாகனத்தின் சாவியை எடுத்துக் கொண்டு பல மணி நேரம் மதகுருமார் கெஞ்சியும் சாவியை கொடுக்காது சுமார் 50க்கு மேற்பட்டோர் சுற்றி வளைத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் சிறைப் பிடித்து வைத்து கொண்டு அவர்கள் பேசிய வார்த்தைகள் எல்லாம் இந்த நாட்டில் இனியும் சிறுபான்மை இன மக்கள் வாழமுடியாது என்ற உணர்வுகளையே பதிவு செய்தது.

ஊடகவியலாளர்கள் எடுத்த புகைப் படங்கள் காணொளிகள் வெளிவந்தால் அந்த பகுதியில் நடைபெறும் சட்ட விரோத குடியேற்றம், சட்டவிரோத காடழிப்பு, குறித்த விபரங்கள் வெளி வரும் என்பதோடு அவர்களுடன் சேர்ந்து இயங்கும் மகாவலி அபிவிருத்தித் திணைக்களத்தின் பாதுகாப்பு உத்தியோத்தர்களின் சட்ட விரோத செயற்பாடுகளும் வெளிவந்து விடும் என்பதற்காக முழுக்க முழுக்க சட்ட விரோத குடியேற்ற வாசிகள் ஊடகவியலாளர்களையே இலக்கு வைத்தனர்.

ஊடகவியலாளர்களை சுற்றி வளைத்துக் கொண்டு அவர்களிடம் இருந்த புகைப்பட கருவிகள், தொலைபேசிகளை பறிப்பதற்கு முயற்சி செய்ததோடு ஊடகவியலாளர்களிடம் வெள்ளைப் பேப்பரில் கடிதங்கள் எழுதி கையெழுத்து வேண்டியும் எடுத்தனர். ஊடகவியலாளர்கள் எடுத்த புகைப் படங்கள் காணொளிகளை எங்கும் பிரசுரிக்க கூடாது என்று கூறி கடிதம் எழுதி கையெழுத்தும் வைக்க சொல்லி அச்சுறுத்திய சம்பவம் இலங்கையில் ஊடாக சுதந்திரம் என்பது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இல்லை என்பதை மீண்டும் மீண்டும் பதிவு செய்கிறது.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்**
**423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்**
**29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை**
**தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# 13இன் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேசிய பாதுகாப்புடன் தொடர்பு நிர்வாக அதிகாரங்கள் பகிரப்படுவதை அரசாங்கமே தீர்மானிக்கும்

13ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற உணர்வு ரீதியான விடயங்களான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையவை என்பதால் அது தொடர்பில் ஒன்றிரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற நிர்வாக அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் தலைமையிலான குழுவால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, அது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் பாராளுமன்றமே இறுதியான தீர்மானத்தினை எடுக்கும் என்றும் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.



13ஆவது திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழுவின் அங்கத்தவரும், அரசாங்கத்தின் பிரதம கொரடாவுமான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக சர்வகட்சிக் குழு கூட்டங்களை நடத்தி வருகிறார். இந்தக் கூட்டங்கள் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், தற்போது அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் கோரப்பட்ட நிலையில் அரசியல் கட்சிகள் பல தமது முன் மொழிவுகளை செய்துள்ளன. இதனையடுத்து, பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழு குறித்த விடயங்கள் மற்றும் ஏனைய கலந்துரையாடல்களின் அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் நிர்வாக அதிகாரங்களை பகிர்வது சம்பந்தமான சட்டமூலம் ஒன்றை தயாரிக்கவுள்ளது. அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனைத்து தரப்பினரினதும் கருத்துக்கள் பெறப்பட்டதன் அடிப்படையில் இறுதி தீர்மானம் எடுக்கவுள்ளது.

அதாவது, குறித்த நிர்வாகப் பகிர்வு சம்பந்தமாக பாராளுமன்றமே இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளது. இந்தச் செயற்பாடுகளில் எவ்விதமான எதிர்மறையான விடயங்களும் இல்லை. அத்துடன் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடனேயே இவ்விடயங்களை முன்னெடுக்கவுள்ளது. மேல் மாகாண முதலமைச்சராக நான் பணியாற்றியவன் என்ற அடிப்படையில் நிர்வாக அதிகாரங்கள் பகிரப்பட வேண் டும் என்பதே எனது நிலைப்பாடகும். இங்கு காணி, பொலிஸ் போன்ற உணர்வுபூர்வமான விடயங்கள் தொடர்பில் தற்போது கலந்துரையாடுவது எதிர்காலத்தை நோக்கிய முன்னெடுப்புக்களை வெகுவாக பாதிப்பதாகவே அமையும். ஏனெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணப்படுகின்ற காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையவை. ஆகவே, அவை தொடர்பில் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டியுள்ளது. நீண்ட கலந்துரையாடல்கள் அவசியமாகிறது என்றார்.

நடைமுறைக்கு சாத்தியமில்லாத விடயங்களை கோரி பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணும் முயற்சிகளையும் சந்தர்ப்பங்களையும் இல்லாதொழிக்க வேண்டாம் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வடக்கு தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் வாக்குவங்கிக்கான தென்னிலங்கை கடும்போக்குவாதிகள் ஆகிய தரப்புக்களிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 13ஆவது திருத்தச் சட்டம் அரசியலமைப்பில் காணப்படுகின்றது. ஆகவே அதுபற்றிய விடயங்களை முன்னெடுக்கும்போது எதிர்ப்புக்களை வெளியிடுவது பொருத்தமல்ல. அத்துடன், அத்திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற நிர்வாக சிக்கல்களை தீர்க்கும் வகையிலான திருத்தங்கள் பாராளுமன்றத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்படவுள்ளன.

அவ்வாறான நிலையில் வடக்கு அரசியல்வாதிகள் நடைமுறைக்கு சாத்தியமில்லாத விடயங்களை கோருவதில் பயனில்லை. அவ்வாறு அவர்கள் தொடர்ச்சியாக விடுக்கும் கோரிக்கையானது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கு வழிசமைக்காது. மாறாக, அவை தொடர்ச்சியாக நீடித்துச் செல்லவே வழிசமைப்பதாக இருக்கும்.

அதேபோன்று தென்னிலங்கையில் வாக்கு வங்கிகளுக்காக கடும்போக்காளர்களாக தம்மை காண்பித்து, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களும் தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தினை குழப்பிவிடக்கூடாது.

வடக்கு மக்களுக்கும், தெற்கு மக்களுக்கும் தற்போது வரையில் முழுமையான இருதரப்பு நம்பிக்கை ஏற்படுத்தப்படாமல் துருவப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலைமையையே முதலில் மாற்ற வேண்டும். அதற்காக ஜனாதிபதி முதற்கட்டமாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

அதன் அடிப்படையில், இரு இன மக்களுக்கும் இடையில் புரிதலும் நம்பிக்கையும் ஏற்பட்டு நல்லிணக்கம் உருவாகின்ற தருணத்தில், மேலதிகமான விடயங்களை பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்த்துக் கொள்ள முடியும். என்றார்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

# குருந்தூர்மலையில் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்பது முரணானது!

## தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதுவே உண்மை என்கிறார் சியம்பலாகஸ்வெவ தேரர்




விடுதலைப்புலிகள் காலத்தில் பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை எனவும் மாறாக பாதுகாப்பே இருந்தது அதற்கு காரணம் விடுதலை புலிகள் நாங்கள் அணிந்திருந்த எங்கள் காவி உடைக்கு தந்த மரியாதை என வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமல சாரநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமைக்கான சர்வமத மக்கள் ஒன்றியம் மற்றும் இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் குறுந்தூர் மலை விவகாரம் தொடர்பான ஊடக சந்திப்பானது வவுனியா ஸ்ரீ போதி தக்சனாராமய விகாரையில் 21 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமை இடம் பெற்ற போதே இவ்வாறு தெரிவித்திருந்தார். இச்சந்திப்பின் மேலும் கருத்து தெரிவித்த மத தலைவர்கள்.

குருந்தூர் மலை விடயமானது தொல்பொருள் திணைக்களத்திற்குரியது. இதனை தனி ஒரு மதம் மட்டும் தனக்கானது என உரிமை கொண்டாட கூடாது.

சிங்கள பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது. ஆனால் இங்கு தமிழ் பௌத்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பதுவே உண்மை. தெற்கில் சம்பந்தமே இல்லாமல் சிங்கள பௌத்த கிராமத்திற்குள் கிறிஸ்தவ மதகுருவோ அல்லது சைவ பூசகரோ வந்து தங்கள் தளம் எனகூறி உரிமை கொண்டாடினால் சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக் கொள்வார்களா அல்லது விட்டுத் தான் கொடுப்பார்களா..? அவ்வாறிருக்கும் போது தமிழரின் பூர்வீக இடமான குருந்தூர்மலை பகுதியில் பௌத்த துறவி ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால் தமிழர்கள் மட்டும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு சாத்தியப்படும்.

வணக்க ஸ்தலங்கள் எல்லா மதத்தவருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியது சிங்கள பௌத்தம் என்றில்லாமல் நாங்கள் இலங்கையர்கள் யாரும் வணங்கலாம் என்ற பொதுநிலைக்கு நாங்கள் சிந்திக்க வேண்டும் மேலும் ஒரு சிலர் இவ்விடயத்தினை அரசியலாக்கி இனங்களுக்கிடையிலான முறுகலினை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர்.

இவ்வாறான தொல்பொருள் பகுதிக்கான இடத்தின் முழுப்பொறுப்பினையும் தொல்பொருள் திணைக்களம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்றும் இதில் வேறு எந்த மதத்தவரும் தலையிடக் கூடாது என்று தெரிவித்திருந்தனர்.

இச் சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமசாரநாயக்க தேரர், நாகதீப ரஜமகா விகாரை விகாராதிபதி பூஜ்ய நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுக்கந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக்குளம் விகாராதிபதி பெரிய உலுக்குளம் சுமணதிஸ்ஸ தேரர், தவ்ஜீத் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சதுர்தீன் மௌலவி, ஓமந்தை பங்கு தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன், கணேசபுரம் கருமாரி நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு பிரமசிறி முகுந்தன்சர்மா ஆகியோரும் கலந்துகொண்டன்.

# சர்வதேசத்திடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பது

சர்வதேச சமூகம் தேசிய இனப்பிரச்னையில் அழுத்தங்களை வழங்க வேண்டுமென்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறான வேண்டுகோள்கள் தமிழ் அரசியல் சூழலுக்கு புதிதல்ல. யுத்தம் நிறைவுற்றதன் பின்னரான கடந்த பதினான்கு ஆண்டுகளாக இவ்வாறான கோரிக்கைகளுடன் தான் தமிழர் அரசியல் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

கேள்வி இன்னும் எவ்வளவு காலத்துக்கு இதனை உச்சரித்துக் கொண்டிருக்கப் போகின்றோம்? அண்மையில், தமிழ் கட்சிகளின் தலைவர்களை (பாராளுமன்ற உறுப்பினர்கள்) சந்தித்திருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் எல்லாவற்றுக்கும் சர்வதேச சமூகத்திடம் முறையிடக்கூடாதென்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் சர்வதேச சமூமென்பது என்ன அது எந்தளவு தூரம் தலையீடு செய்யும் என்னும் கேள்விகளுக்கு பதிலில் தெளிவுடன் இருப்பது அவசியம். இல்லாவிட்டால் தமிழர் அரசியல் சுயமுயற்சியின்றி மற்றவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கும் ஒன்றாகவே சுருங்கிப்போக நேரிடும். இதுவரையில் இதுதான் நடந்திருக்கின்றது.

கடந்த பதினான்கு வருடங்களாக பலரும் பல முயற்சிகளில் ஈடுபட்டனரெனக் கூறப்பட்டது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளும் பலவாறான சர்வதேச உரையாடல்களில் ஈடுபட்டன என்று கூறப்பட்டது. ஆனால் அவற்றின் விளைவுகளை நோக்கினால் குறிப்பிட்டு சொல்லக்கூடிய நிலையில் எதுவுமில்லை. ஏன்? இந்தக் கேள்விக்கான பதில் தொடர்பில் அனைவரும் நேர்மையாக சிந்திக்க முன்வர வேண்டும். சர்வதேச சமூகம் என்பது அடிப்படையில் பலம் பொருந்திய நாடுகள் தான்.

பலம்பொருந்திய நாடுகளின் நலன்களும் அவற்றை வெற்றி கொள்வதற்கான இடையறாத அரசியல், பொருளாதார, இராணுவ நகர்வுகளுமே சர்வதேச அரசியலாகும். இந்த நகர்வுகளில் நீதியின் அடிப்படையில் விடயங்கள் தீர்மானிக்கப்படுவதில்லை மாறாக நலன்களின் அடிப்படையிலேயே விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

இதனைப் புரிந்து கொண்டால் இலங்கையின் இனப் பிரச்னையில் பலம்பொருந்திய நாடுகள், எவ்வாறான அணுகுமுறையை காலத்துக்குக் காலம் முன்னெடுத்திருக்கின்றன முன்னெடுத்து வருகின்றன என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கை விடயத்தில், இந்தியாவின் அணுகுமுறை பிராந்திய ரீதியானது. அயல்நாடுகளில் தனது செல்வாக்கை தக்கவைத்தல் என்னும் அடிப்படையிலேயே இந்தியா விடயங்களை கையாண்டு வருகின்றது. இலங்கையின் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளுக்கு ஏற்ப இந்தியாவின் அணுகுமுறைகள் அமைகின்றன.

அமெரிக்காவை பொறுத்தவரையில் அதன் அணுகுமுறை உலகளாவிய நலன்கள் தொடர்பானது. இதில், உலகளவில் மனித உரிமைகள் மற்றும் தாராளவாத அணுகுமுறைகளை பாதுகாத்தல் என்னும் அடிப்படையில் அமெரிக்காவின் தலையீடுகள் அமைகின்றன. ஆனால், இந்த அணுகுமுறையும் தற்போது அதிகரித்துவரும் சீன செல்வாக்கால் கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கை விடயத்தில் சிங்கள பெரும்பான்மையை அதிகம் அதிருப்திக்கு உள்ளாக்கி விடக்கூடாதென்னும் அடிப்படையிலேயே அமெரிக்காவின் அணுகுமுறை அமைந்திருக்கின்றது. இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் கரிசனையை காண்பிக்கும் ஏனைய மேற்குலக நாடுகள் அவ்வப்போது சில கருத்துக்களை முன்வைத்தாலும் கூட.

அவர்களின் அணுகுமுறையும் இலங்கையிலிருந்து அதிகம் விலகிவிடக்கூடாதென்னும் அப்படையிலேயே அமைந்திருக்கின்றன. இந்த நிலையில், தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான பிரத்தியேக ஈடுபாடு என்னும் வகையில் எந்தவொரு தலையீடும் இல்லை.

தமிழ் மக்களுக்கான தேசிய இனப்பிரச்னை விவகாரத்தை சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் இலகுவாக இழுத்தடித்து வருகின்றனர். 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட, முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் கூட முன்னோக்கி நகரமுடியவில்லை. இந்த விடயம் தொடர்பில் தெளிவான பார்வை தமிழ்த் தரப்புகளிடம் இருக்க வேண்டும்.

# கொழும்பில் கஜேந்திரகுமாரின் வீடு முற்றுகை? சிங்கள இன வெறியர்களுக்கு அழைப்பு!



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பில் உள்ள வீட்டின் முன்பாக இந்த வாரம் முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்குமாறு இலங்கையின் கடும்போக்குவாத அரசியல் கட்சியான பிவித்துறு ஹெல உறுமய அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தமது யூ ரியுப் சமூக வலையத்தளத்தில் வெளியிட்டுள்ள காணொளியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனவாத கொள்கையுடைய பொன்னம்பலம் பரம்பரையின் மூன்றாவது தலைமுறையான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குருந்தூர் மலைக்கு சென்று அரங்கேற்றிய நாடகத்தை நாங்கள் அனைவரும் பார்த்தோம்.

தமிழ் அடிப்படைவாதிகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிமன்ற அனுமதியை பெற்று அங்கு வருகை தந்ததால் நாங்கள் அவர்களை தடுக்கவில்லை. நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுவது நீதிமன்றத்தை அவமதிப்பதாக கருதப்படும் என்பதால் நாங்கள் அமைதியாக இருந்தோம். தொடர்ந்து அமைதியாக இருப்பது அவர்கள் வெற்றிப் பெற்றார்கள் என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கும்.



குருந்தூர் விகாரை 2200 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. குருந்தூர் மலையை சூழ்ந்த பகுதிகளில் புராதன தொல்பொருள்கள் பௌத்த உரிமையை பறைசாற்றுகின்றன.

குருந்தூர் மலை குறித்து மகாவசம்சம் உள்ளிட்ட பௌத்த நூல்களில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குருந்தூர் விகாரை பௌத்தர்களுக்கு சொந்தமானதா என்பது சந்தேகத்துக்குரியதொரு விடயமல்ல. குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது என்பதற்கும் அங்கு இந்து கோயில் இருந்ததற்கும் எவ்வித தொல்பொருள் சான்றுகளும் கிடையாது.

இதனடிப்படையில், அங்கு சென்று மத வழிபாடுகளை மேற்கொள்ள கஜேந்திரகுமாரருக்கு முடியாது. விகாரையில் உள்ள தூண்களில் ஒரு தூண் வட்ட வடிவில் உள்ளது. இந்த தூண் சிவலிங்கம் என்று குறிப்பிட்டு முறையற்ற தர்க்கத்தை முன்வைத்துள்ளார்கள். இதற்கமைய, குருந்தூர் மலை இந்துக்களுடையது என்ற போலியான தர்க்கத்தையும் முன்வைக்கிறார்கள். இந்த நாடகத்தை அரங்கேற்ற அரசாங்கம் இடமளித்துள்ளது. ஆனால் பௌத்த மரபுரிகளை பேணி பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையுடைய (22ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் தலைமையிலான குழுவினரே மாகாண ஆலோசனை சபை குறித்து தீர்மானிப்பர் என்கிறார் விக்கி



13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவினரே மாகாண ரீதியிலான ஆலோசனை சபை குறித்து தீர்மானம் எடுக்கவுள்ளனர் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச்சட்டம், மாகாண சபைகளுக்கான ஆலோசனை சபை மற்றும் ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அண்மையில் சந்திப்பொன்றை நான், கலாநிதி விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முன்னாள் காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் நேரில் சென்று சந்திப்பொன்றை நடத்தினோம். இதன்போது, 13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு சம்பந்தமான விடயங்களை பிரதமர் தலைமையிலான குழுவினரே கையாளவுள்ளதாகவும், அவர்கள் அவ்விடயங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு திருத்தங்களை முன்வைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதன் அடிப்படையில், பாராளுமன்றத்தில் குறித்த திருத்தங்கள் சட்டமூலமாக கொண்டு வரப்படவுள்ளது. அதன் பின்னர், பாராளுமன்றத்திலேயே தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. பாராளுமன்றம் குறித்த திருத்தங்களை அனுமதிக்கா விட்டால், மேற்படி முயற்சி பின்னடைவுகளை சந்திக்கும் இதேவேளை, மாகாண சபைகள் தொடர்பான ஆலோசனை சபை தேவையா, இல்லையா என்பதை பிரதமர் தலைமையிலான குழுவினரே தீர்மானிக்கவுள்ளனர்.

பிரதமர் தலைமையிலான குழுவினர் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றபோது அதுகுறித்த தீர்மானம் எடுக்கப்படும். இதேவேளை, பொருளாதார ரீதியான விடயங்களை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார், குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி விடயங்களில் பின்னடைவுகள் இருப்பதாக அவர் கரிசனை கொண்டுள்ளார்.

அந்த வகையில், மாகாண ஆலோசனை சபை பொருளாதார விடயங்களையும் கையாள வேண்டிய நிலைமைகள் ஏற்படவுள்ளது. அத்துடன், எம்மால் மாகாண ஆலோசனை சபைக்காக கலாநிதி விக்னேஸ்வரன், நிர்மலா சந்திரகாசன், குருநாதன், செல்லத்துரை உள்ளிட்டவர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

அத்துடன் பாராளுமன்ற பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யாத அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரையும் உள்ளீர்க்கும் யோசனைகளும் ஜனாதிபதிக்கு உள்ளது. அந்த வகையில் மாகாண ஆலோசனை சபை அமைக்கப்பட்டால் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நான் பங்கேற்பேன் என்றார்.

## வடமாகாணத்தில் 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் வெளியேற்றம்

வட மாகாணத்தில் ஒருவருடத்தில் 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக வட மாகாண சுகாதார பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். வவுனியா வைத்தியசாலையில் கடந்த 19 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், வட மாகாணத்தில் ஒரு வருட காலப்பகுதியில் 50 இற்கும் அதிகமான வைத்தி யர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் வெளிநாட்டு கல்விக் காக சென்று வராதவர்களும் உள்ளனர். அத்துடன் 20 தாதியர்களும் வெளி யேறியிருக்கின்றனர்.

வைத்தியர்களும் தாதியர்களும் வெளியேறுவது எமக்க ஒரு சவாலான விடயம். அத்துடன் அண்மைக்காலத்தில் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய தாதிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இவ்வருடம் தாதிய கல்லூரியில் படித்து வெளியேறுபவர்கள் இருந்தாலும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு தாதிய பயிற்சிகள் இடம்பெறாத நிலை காணப்படும். ஆகவே, இந்த பகுதிக்கு புதிய தாதிகள் வரமாட்டார்கள். இதனால் நாம் சிக்கலான சவாலை எதிர்கொள்வோம். அத்துடன் வெளிநாடுகளில் தாதிகளை வரவேற்பதனால் அவர்கள் வேலையை முடிவுறுத்தி வெளியேறலாம். எனவே, எதிர்வரும் காலம் சவாலை எதிர்கொள்ளும் காலமாக அமையும் என்றார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# குருந்தூர்மலை விவகாரம்:- சிங்கள இனவெறிக் கூச்சல்கள்



## தமிழர்கள் தப்புக் கணக்குப் போடக் கூடாது!

குருந்தூர்மலையில் பொங்கல் விழாவை நடத்தி விட்டோம் என்ற மமதையில் தமிழ் மக்களும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் கருத்து வெளியிடுகின்றனர். பொங்கல் விழாவை நடத்தியமைக்காகக் குருந்தூர்மலை தமிழர்களின் சொத்து என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடக்கூடாது என தென்னிலங்கை கடும்போக்கு அரசியல்வாதிகளான சரத் வீரசேகர, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகிய எம்.பிக்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

குருந்தூர்மலைக்கு எவரும் வந்து வழிபடலாம். மத வழிபாட்டைக் குழப்புவது பௌத்த சிங்களவர்களின் நோக்கம் அல்ல. சகல மதத்தவர்களையும் அவர்கள் சமமாக மதிப்பவர்கள். ஆனால், பௌத்த சிங்களவர்களுக்குச் சொந்தமான குருந்தூர்மலையைத் தமிழர்கள் உரிமை கோருவதை ஒருபோதும் ஏற்க முடியாது. பொங்கல் விழாவை நடத்தியமைக்காகக் குருந்தூர்மலை தமிழர்களின் சொத்து என்று அவர்கள் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

குருந்தூர்மலைக்கு சென்ற பௌத்த பிக்குகளும், பௌத்த சிங்கள மக்களும் அமைதியாக வழிபட்டார்கள். ஆனால், அங்கு பொங்கல் விழாவுக்கு வந்த தமிழர்கள், பௌத்த பிக்குவை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். பௌத்தர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் ஆணித்தரமாகக் கூறுகின்றோம் குருந்தூர் மலை பௌத்தர்களின் சொத்து. அது தமிழர்களின் சொத்து அல்ல என்றனர்.




## வன்முறை வெடிக்கும்

குருந்தூர்மலை விவகாரத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைந்து தீர்வு காண வேண்டும். இல்லையேல் அங்கு பௌத்தர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் வன்முறைதான் வெடிக்கும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எச்சரிக்கை விடுத்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை விகாரைக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. அங்கு தமிழர்கள் புகுந்து சண்டித்தனம் காட்டுவதை ஏற்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பௌத்த மதத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும். மகாநாயக்க தேரர்களின் ஆலோசனை களுக்கு அமைய அவர் செயற்பட வேண்டும். தமிழ் அரசியல்வாதிகளின் சுயலாப அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஜனாதிபதி முக்கியவத்துவம் வழங்கக் கூடாது. தமிழ் மக்களை உசுப்பேத்திக் குருந்தூர் மலைக்கு அழைத்து வந்து தங்கள் அரசியல் நாடகத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். குருந்தூர்மலை விவகாரத்தை உங்கள் சுயலாப அரசியலுக்காகப் பயன்படுத்த வேண் டாம் என்று தமிழ் அரசியல்வாதிகளிடம் விநயமாகக்



கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## தமிழ்மக்களின் பொங்கலைத் தடுக்காத பௌத்த தேரர்களைக் கண்டிக்கும் மேர்வின்

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள இடமளித்த பௌத்த தேரர்களுக்கு எதிராக சிறிலங்காவின் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கண்டனம் வெளியிட்டுள்ளார். பௌத்த மதத்தை மதிக்கும் மற்றும் உண்மையான சிங்களவராக தம்மை வெளிக்காட்டிய வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரரை போன்று, தேரர்கள் செயல்பட்டிருக்க வேண்டுமென கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தின் மீது மற்றும் விகாரைகள் மீது கை வைத்தால் தமிழர்களின் தலைகளை வெட்டுவேன் என கூறினேன். அன்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் நான் இதையே தான் கூறியிருந்தேன். இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க நான் ஒருபோதும் பயப்பட போவதில்லை. இன்று வடக்கு மற்றும் கிழக்கிலிருக்கும் விகாரைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

விகாரைகள் இருந்த இடங்களில் கோவில்கள் கட்டப் படுகின்றன. கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. நான் இனவாதத்தை தூண்ட விரும்பவில்லை, எனினும், தற்போது இலங்கைக்கு பௌத்த மதத்தை மதிக்கும் உண்மையான பௌத்த தேரர்கள் தேவை. உண்மையான பௌத்த எண்ணம் மனதில் இருக்குமாயின் இவ்வாறான செயல்கள் இடம்பெற யாரும் இடமளித்திருக்க மாட்டார்கள். இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என கூறும் தரப்பினர் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை எதிர்ப்பதாக தெரிவிக்க வேண்டும்.



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றிக் கருத்துக் கூறிய மஹிந்த ராஜபக்ச, அவருக்கு ஒரு நோக்கம் இருந்தது, பாதை இருந்தது, ஒழுக்கம் இருந்தது. பிரபாகரன் எடுத்த பாதை தவறானது ஆனால் அவரது ஒழுக்கமும் செயற்பாடுகளில் இறுக்கமான கட்டுப்பாடும் இருந்தன. அவர் தேவையானபோது தாக்குதல்களை மேற்கொள்வார், தேவையற்றபோது தவிர்த்துக் கொள்வார். - தலைவர் பற்றி மகிந்த ராஜபக்ஷ

## ரணிலின் அறிவுரை உணர்த்துவது என்ன?



எதிர்காலத்தை கையாளுவதற்கு ஹிந்தி மற்றும் சீன மொழியை கற்குமாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். பாடசாலை நிகழ்வொன்றில் பங்கு கொண்டு பேசுகின்றபோதே அவர் இந்தக் கருத்தைக் கூறியிருக்கின்றார்.

இதன் மூலம் இலங்கைத்தீவில் இந்தியாவும் சீனாவும் ஏதோவொரு வகையில் செல்வாக்குச் செலுத்தும் நாடுகளாக இருப்பதை, எக்காலத்துக்கும் தவிர்க்கவே முடியாதென்பதைத் தான் ரணில் சுட்டிக் காட்ட முற்படுகின்றாரா? இதேவேளை, உலகின் அரசியல் மற்றும் பொருளாதார மையமாக ஆசியப் பிராந்தியம் எழுச்சியடைந்து வரும் நிலையில் இந்தியாவும் சீனாவும் பிரதான பங்கை வகிக்கப்போகின்றன.

எனவே, இவ்வாறானதொரு சூழலில் நன்மைகளை பெற வேண்டுமாயின், வழமையான ஆங்கிலக் கல்விக்கு மாறாக ஹிந்தி மற்றும் சீன மொழியையும் அடுத்த தலைமுறை கற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவருகின்றது என்னும் கருத்தும் ரணிலின் கூற்றுக்கு பின்னால் உண்டு.

ரணிலின் புதுடில்லி பயணத்தின் போது, சில முக்கிய திட்டங்கள் தொடர்பில் உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. இதில் பாக்கு நீரிணையை ஊடறுக்கும் வகையிலான பாலம் மற்றும் தென்னிந்தியாவுக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பெற்றோல் குழாய்களை நிர்மாணிக்கும் திட்டங்கள் மிக முக்கியமானவை.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் ஒரு புதிய அத்தியாயத்தை மேற்படி திட்டங்கள் ஏற்படுத்தக் கூடுமென்னும் எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், அதில் கல்லை எறியும் வகை யில் சீனாவின் யுத்தக் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டது.

ஒக்ரோபர் மாதம் மீண்டும் சீனாவின் உளவுக் கப்பலொன்றும் இலங்கைக்கு வரவுள்ளது. தற்போது, தென் சீனக் கடலில் அது நங்கூரமிடப் பட்டுள்ளது. இந்தியாவின் கவலைகளை மீறியே முன்னரும் சீனாவின் உளவுக் கப்பலொன்று, அம்பாந்தோட்டையில் நங்கூரமிடப்பட்டது. தற்போது மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படவுள்ளது.

இதனை இந்தியாவால் எந்தளவு தூரம் தடுக்க முடியுமென்பதற்கப்பால் சீனாவின் நகர்வுகளை இலங்கையால் எந்தளவுக்கு தடுக்க முடியுமென்பதும் அடுத்த கேள்வியாகும். ஏனெனில், இலங்கை யின் ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் சீனாவை அதிகம் நாட்டுக்குள் விட்டு விட்டனர் சீனா அதிகம் காலூன்றி விட்டது.

இதேவேளை, இந்தியாவின் பாரம்பரிய செல்வாக்கு எல்லைக்குள் அதன் செல்வாக்கை அதிகரிக்கும் திட்டமிட்ட நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது. இந்த நிலையில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான அதிகார மோதல்களின் போது, நடுவில் நிற்கும் அதேவேளை இருவரையும் அரவணைத்து நன்மைகளை பெறும் உத்தியை பற்றியே கொழும்பின் ஆளும் தரப்பு சிந்திக்கின்றது.

மாணவர்கள் ஹிந்தியையும் சீன மொழியையும் படிக்க வேண்டுமென்று கூறுவதிலும் இருவரும் தேவையென்னும் அணுகுமுறையே மேலோங்கியிருக்கின்றது. ஆனால் இவ்வாறான இருவரையும் அரவணைக்கும் அணுகுமுறை மூலம், இலங்கை எந்தளவுக்கு எவ்வளவு காலத்துக்கு பயணிக்க முடியும் இதேவேளை, இந்த அணுகு முறையை எந்தளவுக்கு எவ்வளவு காலத்துக்கு இந்தியாவால் ஒரு நட்பு நாடென்னும் எல்லைக் குள் விடயங்களை கையாள முடியும்? இந்தக் கேள்விக்கான பதிலில் தான் இலங்கையின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

# குருந்தூர்மலை விவகாரம்:- அரசின் நீண்டகால நிகழ்ச்சி நிரலிற்கு மறவன்புலோ சச்சிதானந்தன் துணை - அம்பிகா சற்குணநாதன் சாடல்



சிவசேனையின் மறவன்புலோ சச்சிதானந்தன் குருந்தூர் மலையை அடிப்படையாக வைத்து அரசாங்கம் முன்னெடுக்கும் தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்றார் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் சாடியுள்ளார் டுவிட்டர் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலையில் இடம் பெறுவது தனியான ஒரு சம்பவமில்லை மாறாக வடகிழக்கின் குடிசனப்பரம்பலை மாற்றுவது நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை குறைப்பது உட்பட பல நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு நீண்டகால தந்திரோபாயமே அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக தொல்பொருள்திணைக்களம் இராணுவம் பௌத்தமதகுருமார்கள் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து வலதுசாரி அமைப்பான சிவசேனையின் மறவன்புலோ சச்சிதானந்தன் போன்றவர்கள் அரசாங்கத்தின் இந்த மூலோபாயத்தை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் முன்னெடுக்கின்றனர் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த குழுக்களிற்கு ஆதரவளித்து கிறிஸ்தவர்கள் முஸ்லீம்களிற்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் தமிழர்கள் இதனை கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தங்களை இந்த விடயம் பாதிக்காது என கருதும் இந்த விடயம் குறித்து கரிசனையற்றவர்கள் பௌத்த மதகுருமார் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளதையும் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததையும் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

இது நீதித்துறையின் அதிகாரத்தை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் செயல் படாத நீதி அமைப்பை மேலும் பல வீனப்படுத்தும் ஒரு செயலாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# குருந்தூர்மலையில் தமிழர்களின் இறுதிப் பொங்கல் இதுவே! குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு விகாராதிபதி எச்சரிக்கை!

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் நடைபெற்ற பொங்கல் வழிபாடே தமிழர்களின் இறுதி பூசையாக இருக்க வேண்டும் என குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார். சிறிலங்காவின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த குருந்தூர் மலையை ஒரு போதும் தமிழர்களுக்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில் ,

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. எனினும் இதனை நாம் தவறான தீர்மானமாகவே கருதுகிறோம். சம்பிரதாய ரீதியான இந்து மக்கள் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க மாட்டார்கள்.

வடக்கு மாணத்தில் சிங்கள மக்கள் வாழ்வதை விரும்பாத தரப்பினர் விகாரையின் கட்டுமானப்பணிகளை எதிர்த்தனர். இவ்வாறான இனவாதத்தை தூண்டும் தரப்பினரே இன்று பொங்கல் வழிபாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவை மதிக்கும் வகையில் நாம் இதற்கு இடையூறு விளைவிக்காதிருந்தோம். எனினும், இங்கு நடைபெறும் இறுதி பூசையாக அல்லது நிகழ்வாக இது இருக்க வேண்டும். குருந்தூர் மலையில் அமைக்கப்பட்ட விகாரை தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து தீர்ப்புக்களையும் சவாலுக்குட்படுத்தி நாம்



மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளோம். இந்த பிரச்சனையை மேன்முறையீட்டு நீதிமன்றில் தீர்த்துக் கொள்ள நாம் எதிர்பார்த்திருக்கிறோம். இந்த தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை நாம் ஒரு போதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

இது இலங்கையின் சொத்து. இதன் உண்மையான உரிமையாளர்கள் பௌத்தர்களே. இவற்றை பாதுகாக்கவும் இதன் பயனை பெற்றுக் கொள்ளவும் அனைவருக்கும் உரிமையுண்டு. எனினும், இது பௌத்தர்களுக்கானது. அந்த உரிமையை எவராலும் பறிக்க முடியாது.' என்று மேலும் அவர் தெரிவித்தார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# மீண்டும் ஒரு இனக்கலவரம்:- இந்திய உளவுத்துறை தகவல்

- சிவலிங்கம் சிவகுமார் -

இலங்கையில் மீண்டும் ஒரு இனக்கலவர சூழல் உருவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக இந்திய உளவுத்துறை கூறியிருப்பதை சாதாரணமாக புறந்தள்ளி விட முடியாது. அவ்வாறான நிலைமைகளுக்கான ஆரம்பப் புள்ளிகளாக கடந்த இரு வாரங்களாக இடம் பெற்றுவரும் சம்பவங்கள் இதற்கு கட்டியம் கூறி நிற்கின்றன.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமா? கூடாதா? என்பதை பேசித் தீர்மானியுங்கள் என பாராளுமன்றத்தின் பக்கம் கை காட்டி விட்டு, அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் வந்து கொண்டிருக்கும் கருத்துகளை மெல்லிய புன்சிரிப்போடு செவிமடுத்துக்கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.




பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரைக்குப் பிறகு ஒரு குழப்பகரமான சூழல் எழுந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. பொதுஜன பெரமுன மேலும்



பிளவுபட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சகலதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பஷில் ராஜபக்ஷவுக்கு எதிராகவே ஒரு அணி உருவாகி விட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி புத்திக பத்திரண, இராவண மன்னன் பற்றிய முழுமையான தகவல்களை வெளிக்கொணர வேண்டுமென ஒரு தனி நபர் பிரேரணையை கடந்த 11 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

தனது பக்கம் உள்ள எம்.பிக்கள் என்ன பிரேரணைகளை கொண்டு வருகின்றார்கள் என்ற விடயத்தை எதிர்க்கட்சி தலைவர் சஜித் அறியாமலிருப்பாரா? தற்போதைய ஒரு சூழலில் எதற்கு இப்படி ஒரு விடயதானத்தை தனி நபர் பிரேரணையாக கொண்டு வர புத்திக பத்திரண எம்.பி தீர்மானித்தார், அதற்கு எப்படி சஜித் சம்மதம் தெரிவித்தார்? இது சிந்திக்க வேண்டிய விடயம்.

பிரேரணையைக் கொண்டு வந்தது ஐக்கிய மக்கள் சக்தி தான் என்றாலும் அதை பரபரப்பாக்கியது என்னவோ பொதுஜன பெரமுன எம்.பி சரத் வீரசேகர தான். இந்த பிரேரணை தொடர்பான அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த சரத் வீரசேகர, 'இராவணன் இயக்கர் குல சிங்கள மன்னன் என்றும் இராவணனை தமிழ் மன்னன் என்று சொல்வதற்கு வெட்கப்படவேண்டும் என்றும் எந்தவித ஆதாரங்களையும் முன்வைக்காது இனவாத கருத்தொன்றை முன்வைத்தார்.

பிவித்துரு ஹெலஉறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பிலவும் இராமாயணம் எமது எதிரிகளின் கதை என வர்ணித்தார். ஏற்கனவே இராவணனை உரிமை கொண்டாடி இராவணா பலய என்ற அமைப்பை உருவாக்கிய பிக்குகள், இராமன் இலங்கை மீது படையெடுத்த முதல் அந்நிய சக்தி என்றும் அந்த யுத்தத்தில் போரிட்டு உயிரிழந்த இராவணன் நாட்டை மீட்க தியாகம் செய்த முதல் மாவீரன் என்ற கதையை முன்பே கூறியிருந்தமை முக்கிய விடயம்.

இராவணன் பற்றிய உரையே அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் பிரதான தலைப்பு செய்தியாகியிருந்தது. இது குறித்து சமூக ஊடகங்களில் வாதப் பிரதிவாதங்கள் உருவாகின.

இந்த சர்ச்சைகளுக்கு மத்தியிலேயே மறுநாள் 12 ஆம் திகதி திருகோணமலை விகாரை விடயம் பரபரப்பானது.

திருகோணமலை இலுப்பைகுளம் கிராமத்தில் புத்தசாசன அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விகாரையின் கட்டுமானப் பணிகளை இடை நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநரால் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பிரதேசமானது பாரம்பரிய தமிழர் பகுதியாகும்.

இங்கு சிங்கள பௌத்த மக்களே வசித்து வராத போது எதற்கு விகாரை என்ற எதிர்ப்பு அப்பகுதி தமிழ் மக்களிடத்தே எழுந்திருந்தது. இதன் காரணமாகவே இப்பணியை இடை நிறுத்துவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்திருந்தார். எனினும் இங்கு ஒன்று திரண்ட பிக்குகள், கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவத்தை வைத்தும் இனவாதிகள் சமூக ஊடகங்களில் இனவாத கருத்துக்களை பகிர்ந்தனர். இந்த சம்பவத்தின் சூடு ஆறுவதற்குள் எங்கிருந்தோ வந்து குதித்தார் முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா. பல நாட்கள் அஞ்ஞாதவாசம் இருந்த மேர்வின் வழமையான தனது அடாவடித்தனத்தை இம்முறை இனவாதமாக கக்கினார்.

இது சிங்கள பௌத்த நாடு. நான் வடக்கு, கிழக்கிற்கு வருவேன். நீங்கள் விகாரைகள் அமைப்பதை தடுக்க முயன்றால், மகா சங்கத்தினரை எதிர்த்தால் நான் உங்கள் தலைகளை கொய்து எடுத்துக் கொண்டு களனிக்கு வருவேன் என நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் வடக்கு ,கிழக்கு வாழ் தமிழ் தரப்பினருக்கு பகிரங்கமாகவே இந்த அச்சுறுத்தலை விடுத்திருந்தார்.

இந்த நிகழ்வை யார் எதற்காக ஏற்பாடு செய்தார்கள், அதில் ஏன் மேர்வின் சில்வா கலந்து கொண்டார், எதற்காக அவ்வாறு கதைத்தார் என்பது பற்றிய எந்தத் தகவல்களும் இல்லை.

இவ்வாறு தமிழர்களுக்கு எதிரான ஒரு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலொன்று அரங்கேறி வந்த நேரத்தில் திடீரென, விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் மனைவி மற்றும் மகள் உயிருடன் இருப்பதாக தெரிவிக்கும் ஒரு காணொளி பரபரப்பை ஏற்படுத்தியது.

டென்மார்க்கில் வதியும் பெண் ஒருவர் இந்தத் தகவலை கூறியதோடு அவர்கள் இருவரையும் தான் சந்தித்ததாகவும் தெரிவித்திருந்தார். இவர் பிரபாகரனின் மனைவி மதிவதனியின் சகோதரி என தன்னை அறிமுகப்படுத்தியிருந்தார்.

இதற்கு பாதுகாப்பு அமைச்சு உடனடியாக தனது மறுப்பைத் தெரிவித்திருந்தது. இது நகைப்புக்கிடமான விடயம் என பாதுகாப்பு அமைச்சின் ஊடக பேச்சாளர் கேர்ணல் நளின் ஹேரத் தெரிவித்திருந்தார். ஆனால், இந்த விடயம் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை உண்மை.

இவ்வளவு சம்பவங்கள் இடம் பெற்றும் ஜனாதிபதியின் கனத்த மௌனத்தின் அர்த்தம் எதை குறித்து நிற்கின்றது என்பதை அறியக்கூடிய அரசியல் அறிவு உள்ளவர்கள் எவருமே இல்லை.



வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழர் பாரம்பரிய இடங்களில் பௌத்த ஆக்கிரமிப்புக்கள் பற்றிய சம்பவங்களில் ஒரு விடயத்தை மாத்திரமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கவனத்துக்கு கொண்டு வந்தார். அது பறாளை முருகன் கோயில் தல விருட்சம் சம்பந்தப்பட்டது.

அது சங்கமித்தை நாட்டிய மரம் என்றும் அவ்விடத்தை பாதுகாக்க வேண்டும் என்று தொல்லியல் திணைக்களம் எந்தவித விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சி க-ளையும் முன்னெடுக்காது வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமை தொடர்பில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைவர்களான சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த 9 ஆம் திகதி சந்தித்துப் பேசியிருந்தனர்.

அந்த வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக இரத்து செய்ய முடியாது என ஜனாதிபதி கூறியதற்குக் காரணம் தென்னிலங்கையின் பேரினவாதிகளின் எதிர்ப்பாகும். எனவே மரத்தின் வயதை கணிப்பதற்கு விஞ்ஞானபூர்வ ஆய்வுகளை மேற்கொள்ள பணிப்பதாகவும் அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்வதாகவும் ஜனாதிபதி உறுதி அளித்திருந்தார்.

இந்த சம்பவங்கள் அனைத்துக்கும் பிறகே இலங்கையை கண்காணிக்கும் இந்திய புலனாய்வுத்துறை வட்டாரங்கள் இங்கு மீண்டும் ஒரு இனக்கலவரம் வெடிக்கும் சூழல் உருவாகி வருவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழி விவகாரத்தில் சர்வதேச தலையீடு அவசியம் என வலியுறுத்தி வடக்கு மாகாணம் முழு கடையடைப்பை செய்திருந்தது. இது தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தையும் அதே வேளை ஆத்திரத்தையும் உருவாக்கியுள்ளதாக இந்திய புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மனித படுகுழி விவகாரத்தையும் வடக்கு, கிழக்கு தமிழர் பிரதேச பௌத்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் திசை திருப்புவதற்காகவா இராவணன் கதைகளும் மேர்வின் சில்வாவின் தமிழர்களின் தலை கொய்யும் கதைகளும் பிரபாகரனின் குடும்பத்தினர் உயிருடன் இருக்கும் கதைகளும் ஏற்படுத்தப்பட்டனவா என்ற சந்தேகங்களும் எழாமலில்லை.

ஆளுங்கட்சியில் பல பிரிவுகள். எதிர்க்கட்சியிலும் அப்படியே. கட்சிகளில் பல பிரிவுகள் இருந்தாலும் இவை அனைத்தும் பேரினவாதம் எனும் விடயத்தில் இறுக கைகோர்த்து தமிழர்களுக்கு எதிராக ஒன்றாகவே பயணிக்க ஆரம்பித்துள்ளன என்பது மட்டும் நிச்சயம்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

19 ஆகஸ்ட் 2023 முதல் 25 ஆகஸ்ட் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 49வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு நடராஜா

யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 49வது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு நடராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன்

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் (மாவீரன் கப்டன் ஜேம்ஸ்) அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 07 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரின் பெற்றோர்களும் உறவுகளும் அன்னாரது நினைவாக 19 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் அவர்களது ஆத்மா சாந்தியடையவும் அவரது கனவு நனவாகவும் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.




# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



07 ஆகஸ்ட் 2023 பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் (மாவீரன் கப்டன் ஜேம்ஸ்) அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அவரது பெற்றோர்களும் சகோதரங்களும் இணைந்து அவரது நினைவாக 19 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை கனடா மார்க்கம் வீதியில் அமைந்துள்ள வசந்தம் சுப்பர்மார்க்கட் நிறுவனத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி உமாகாந் உசாந்தினி இணையர்களது 13வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



20 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலச்சந்திரன் கோகுலவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிராமி பாலச்சந்திரனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி அபிராமி அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



21 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக. அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 49வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக. பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



வரலக்ஷ்மி விரதமும், திருவிளக்குப் பூஜையும்
காலம்: 25.08.2023 வெள்ளிக்கிழமை



வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் காலை, மாலை மஹாலக்ஷ்மி ஹோமமும், அபிஷேக பூஜையும் நடைபெற்று திருவிளக்குப் பூஜையுடன் விரதக்காப்பும், பிரசாதமும் வழங்கப்படும்.

வரலக்ஷ்மி விரத நோன்பு இருக்கும் கன்னிப் பெண்கள், சுமங்கலிப் பெண்கள், விரத தாதிகள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

திருவிளக்குப் பூஜை நடை பெறும் நேரங்கள்

காலை - 9:30 மணி, 11:00 மணி

மாலை - 4:00 மணி, 5:30 மணி, 6:30 மணி, 7:30 மணி

CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 | Tel: 416-321-6104 | Fax: 416-321-7557 | www.ayyappan.com


SULLIVAN AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
AUGUST
SAT 26 12PM - 11PM
SUN 27 11AM - 9PM
POWERED BY
iConnect Mortgages
Dominion Lending Centres
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
தமிழர் தெரு விழா
Tamil Fest
ஆசியாவுக்கு வெளியே அதிக மக்கள் பங்கேற்கும் மாபெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival outside of Asia
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA
Formula Honda
NISSAN
MORNINGSIDE NISSAN
POWERED BY SPONSOR
iConnect Mortgages
Dominion Lending Centres
PROUDLY HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SILVER SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
NAVA WILSON
PRADON SILKS
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING HOUSE
MAESTRO YUVAN
MARKETING PARTNER
PRINT FAST.ca
SUPPORTED BY
Canada
TORONTO
MEDIA SPONSORS
ATN
ASIAN TELEVISION NETWORK
102.7 east FM தமிழ்
metroland
tamilfest.ca @TamilFest info@canadiantamilcongress.ca 416.240.0078

# என் இனமே! என் சனமே! என்னை உனக்கு தெரிகிறதா? தாகமாய் இருக்கின்றோம்! கொஞ்சம் கிள்ளிப் போடுங்கள்!





என் இனிய உறவுகளே! 12 வருடங்களுக்கு முன்னர் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் என மூன்று இல்லங்களில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களது உணவுத் தேவை, கல்விக்கான தேவைகளை கனடா வாழ் தமிழ்ச் சமூகம் ஈழநாடு பத்திரிகை வாயிலாக ஆற்றி வருவது யாவரும் அறிந்ததே.

கடந்த 09 யூலை 2023 நாம் இந்த இல்லங்களுக்குச் சென்ற போது இன்னும் இன்னும் குழந்தைகளும் பிள்ளைகளும் இணைந்த வண்ணமேயுள்ளனர். இட நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நிதி நெருக்கடி போன்ற பல்வேறு நெருக்கடிகளை நாம் எதிர் கொண்ட போதும் எமது மண்ணின் வருங்காலச் சந்ததி, எதிர்காலத்தில் அந்த மண்ணில் வாழப் போகும் சந்ததி. இவர்களைக் கை விடலாமா என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. மனிதாபிமானமும் மனித நேயமும் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள காரணத்தால் சுமார் 15 குழந்தைகளை புதிதாக உள்வாங்கியுள்ளோம்.

உறவுகளே! இந்தக் குழந்தைகளை உற்று நோக்குங்கள். இவர்கள் செய்த பாவம் என்ன? தமிழராய் பிறந்தது குற்றமா? தேச விடுதலைக்குப் பெற்றோர்கள். உறவுகள் போராடியது குற்றமா? இவர்கள் குடும்பத்தை வறுமை துரத்தியது எதனால்? சிந்தியுங்கள்.

அன்பு உறவுகளே! எதிர்வரும் 29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை இவர்களது வாழ்வுக்காக நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்து கொள்ளுங்கள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலரும் அவர்களைச் சென்றடையும். கடந்த காலங்கள் போல் கணக்கு விபரங்கள் ஈழநாட்டில் பிரசுரமாகும். உங்கள் ஆதரவை 416 841 9600 என்ற தொலைபேசி ஊடாகத் தெரிவிக்கவும். மேலதிக விபரங்கள் அடுத்தவாரம் வெளிவரும்.

பாரதி இல்லம் அன்பு இல்லக் குழந்தைகளையும் கனடியத் தமிழ் சமூகத்தின் ஆதரவோடு கட்டப்பட்ட இல்லத்தையும் பிள்ளைகளின் பாடசாலைப் போக்குவரத்துக்காக வாங்கிய பஸ் வண்டியையும குழந்தைகள் மனதில் மத பேதம் இருக்கக் கூடாது என்பதற்காக அருகருகே அமைந்த ஆலயத்தையுமே படங்களில் காண்கின்றீர்கள். அத்துடன் இல்லக் குழந்தைகளின் தாயாக விளங்கும் தாய்மார்களேயே காண்கின்றீர்கள். நன்றி.













# 3 தமிழர்கள் படைத்த சாதனை- முதல்வர் வாழ்த்து சந்திராயன்3:- நிலாவை முத்தமிட்டது இந்தியா!


23 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை மாலை இந்திய நேரப்படி 6:04 மணிக்கு இந்தியாவின் சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலாவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. நிலாவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல்நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது. நிலவில் தரையிறங்கிய இடத்தைப் புகைப்படம் எடுத்து அனுப்பிய விக்ரம் லேண்டர்.

படிப்படிப்பாக லேண்டரின் உயரம் குறைக்கப்பட்டு மாலை 6.04 மணிக்கு நிலவின் தரைப்பகுதியில் விக்ரம் லேண்டர் கால் பதித்தது. விக்ரம் லேண்டர் தரையிறங்கும் நிகழ்வை தென் ஆப்ரிக்காவில் இருந்து காணொளி வாயிலாக பிரதமர் நரேந்திர மோதி இஸ்ரோ குழுவினருடன் இணைந்து பார்த்தார்.

## பிரதமர் உரை

விக்ரம் லேண்டர் தரையிறங்கியது தொடர்பாக காணொளி வாயிலாக உரையாற்றிய பிரதமர் மோதி, இது போன்ற வரலாற்றுத் தருணங்களைப் பார்க்கும் போது நமக்குப் பெருமையாக இருக்கிறது. இது புதிய இந்தியாவின் விடியல். இந்த தருணம் மறக்க முடியாதது. இந்த தருணம் இதற்கு முன் நடந்திராதது. துயரக் கடலை கடக்கும் தருணம் இது.

140கோடி இந்தியர்களின் துடிப்பால் இந்த தருணம் உருவாகியுள்ளது. இந்த தருணத்துக்காக இஸ்ரோ பல ஆண்டுகளாக கடுமையாக உழைத்துள்ளது. 140 கோடி நாட்டு மக்களுக்கும் எனது வாழ்த்துகள். நமது விஞ்ஞானிகளின் கடின உழைப்பாலும் திறமையாலும், உலகில் எந்த நாடும் அடைய முடியாத நிலவின் தென் துருவத்தை அடைந்துள்ளோம் என்று தெரிவித்தார். சந்திரயான் – 3 திட்டத்தின் திட்ட இயக்குநராக தமிழ்நாட்டின் வீர முத்துவேல் செயல்பட்டு வருகிறார். விக்ரம் லேண்டர் வெற்றிகரமாகத் தரையிறங்கியதும் பேசிய அவர் 'எனது குழுவினர் முழுமையான பங்களிப்பை வழங்கினர்' என்று கூறினார்.



விழுப்புரத்தில் விஞ்ஞானி வீர முத்துவேல் அவர்களின் தந்தையார் பழனிவேல் சந்திராயன் நிலவில் தரை இறங்கும் காட்சியை ஆர்வமுடன் அவர் வீட்டில் இருந்த படியே கண்டு ரசித்தார்

## 3 தமிழர்களால் பெருமை

சந்திரயான் 3 விண்கலம் நிலாவில் தரையிறங்கிருப்பதன் மூலம் தமிழ்நாட்டுக்கு அளப்பரிய பெருமை கிடைத்திருப்பதாக மு.க. ஸ்டாலின் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். சந்திரயான் –1 திட்டத்தில் பணியாற்றிய மயில்சாமி அண்ணாதுரை சந்திரயான –2 திட்டத்தில் பணியாற்றிய வனிதா, தற்போது சந்திரயான் –3 திட்டத்துக்கு தலைமை வகிக்கும் வீர முத்துவேல் ஆகியோரை தனது வாழ்த்து செய்தியில் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## யாகங்கள், பூஜை, பிரார்த்தனை

முன்னதாக சந்திரயான் 3 திட்டம் வெற்றி பெற வேண்டி இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மத வழிப்பாட்டு தலங்களில் பிரார்த்தனைகள் நடைபெற்றன. டெல்லியில் உள்ள ஜன் கல்யான் சமிதியில் சந்திரயான் 3 திட்டம் வெற்றி பெற வேண்டி யாகம் வளர்த்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. டெல்லியில் உள்ள பங்களா சாகிப் குருத் வாராவில் மத்திய அமைச்சர் ஹர்திப் சிங்பூரி







உள்ளிட்டோர் சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். நிலவில் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்க வேண்டி காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள ஹஸ்ரட்பால் தர்காவில் சிறப்பு தொழுகையில் இஸ்லாமியர்கள் ஈடுபட்டனர்.

## விக்ரம் லேண்டர் நிலவில் என்ன பணிகளைச் செய்யும்?

நிலாவின் தென் துருவப்பகுதியில் 70 டிகிரி அட்சரேகையில் லேண்டர் தரையிறங்கியது. அந்தப் பகுதியில் தான் சந்திரயான் –3 தனது ஆய்வுகளைச் செய்யப் போகிறது.

நிலாவில் வெப்பம் அதிகமாக இருக்கும் மண் பகுதியில் நடக்கும் மாற்றங்களை அறிவது, நிலாவில் உள்ள பொருட்கள் என்ன நிலையில் உள்ளன, அங்குள்ள வெப்பத்தைத் தாங்கும் தன்மை கொண்டதா அல்லது அந்த வெப்பத்தில் உடையக்கூடிய பொருட்களாக உள்ளனவா என்பது போன்ற தகவல்களை கண்டறிவது ஆகிய பணிகள் மேற்கொள்ளபடவுள்ளன. இதேபோல், பூமியைப் போலவே நிலாவிலும் நில அதிர்வுகள் உள்ளனவா, இப்போது இல்லையென்றால் முன்பு இருந்தனவா என்பன போன்ற தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கிய பின்னர், அதன் உள்ளே இருக்கும் ரோவர் வெளியே வரும். இந்த ரோவர் நிலாவின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து தரைப் பரப்பின் தன்மை என்ன, வெப்பம் எந்த அளவுக்கு உள்ளது, தண்ணீர் உள்ளதா என்பன போன்ற தகவல்களைச் சேகரித்து அனுப்பும். சந்திரயான் –3 நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கி விட்டது. தரையிறங்கிய விக்ரம் லேண்டரில் இருந்து வெளியேறும் ரோவர் எனப்படும் ஊர்திக்கலன் நிலவில் என்ன செய்யப் போகிறது? அது குறித்த தகவல்களை இஸ்ரோ அதன் இணைய தளத்தில் தெரிவித்துள்ளது. சந்திரனின் ஒரு நாள் என்பது பூமியில் 28 நாட்களுக்குச் சமம். அதாவது அங்கு 14 நாட்களுக்குப் பகல் மற்றும் 14 நாட்களுக்கு இரவு நிலவும். இதில் 14 நாட்களுக்கு பகல் நீடிக்கும் காலகட்டத்தில் விக்ரம் லேண்டர் தரையிறங்கியுள்ளது.

இந்த இரண்டு வார கால கட்டத்தில் இஸ்ரோவின் ஆய்வுகளை அது நிலவில் மேற்கொள்ளும். அங்கு விக்ரம் லேண்டரில் இருந்து வெளியே வரும் பிரக்ஞான் ரோவர் மேற்கொள்ளப் போகும் ஆய்வுகள் இந்தியாவின் எதிர் கால நிலவு மற்றும் விண்வெளித் திட்டங்களில் குறிப்பிடத் தக்கப் பங்கு வகிக்கும்.

## விக்ரம் லேண்டர் சேகரிக்கும் தகவல்களை என்ன செய்யும்?

விக்ரம் லேண்டர் தரையிறங்கியதால் எழும்பிய புழுதி அடங்கிய பிறகு நிதானமாக வெளியே வரும் பிரக்ஞான் ரோவர், நிலா குறித்து அனுப்பும் தகவல்களை விஞ்ஞானிகள் ஆய்வு செய்வார்கள். அந்தத் தரவுகள் லேண்டர் மூலம் பூமிக்கு அனுப்பப்படும். மின்காந்த அலைகளாக மாற்றப்படும் அந்தத் தரவுகளை ஒருவேளை லேண்டர் மூலம் பூமிக்கு அனுப்பும் முயற்சி தோல்வியடைந்து விட்டால் என்ன செய்வது?

அதற்கும் இஸ்ரோ ஒரு மாற்றுத் திட்டத்தை வைத்துள்ளது. இந்த இடத்தில்



தான் சந்திரயான் –2இன் ஆர்பிட்டர் உள்ளே வருகிறது. அந்த ஆர்பிட்டர் தரையிறங்கி கலனுடன் தொடர்பில் இருக்கும். விக்ரம் தரையிறங்கி கலன் ரோவரிடம் இருந்து பெறும் தகவல்களையும் அது மேற்கொள்ளும் ஆய்வுகளின் தரவுகளையும் மொத்தமாக பூமிக்கு அனுப்பும்.

அதேவேளையில், அந்தத் தரவுகளை ஆர்பிட்டருக்கும் அனுப்பி வைக்கும். பிறகு, அந்தத் தரவுகள் ஆர்பிட்டர் மூலம் பூமிக்கு மீண்டும் அனுப்பப்படும்.

இரண்டில் ஏதாவது ஒரு திட்டத்தில் பிரச்சனை ஏற்பட்டாலும் தரவுகள் தங்கள் கைக்குக் கிடைத்துவிட வேண்டும் என்பதற்காக இத்தகைய யுக்தியை இஸ்ரோ பயன் படுத்துகிறது.

## 2 வாரங்களுக்கு மட்டுமே ஆய்வு

இந்தத் திட்டத்தின் கீழ் நிலாவில் இந்தியா மேற் கொள்ளப் போகும் ஆய்வுகள் அனைத்துமே இரண்டு வாரங்களுக்கு மட்டும் தான். ஏனென்றால், இரண்டு வாரம் முடிந்ததும் நிலாவில் இரவு தொடங்கிவிடும். இரவு நேரத்தில் அங்கு மைனஸ் 200 டிகிரி செல்ஷியஸ் வரைக்குமே வெப்பநிலை குறையும். அந்த உறைபனிக் குளிரில் லேண்டர், ரோவர் இரண்டுமே இயங்க முடியாது.

அவை இயங்குவதற்குத் தேவையான சூரிய ஒளி அடுத்த இரண்டு வாரங்களுக்குக் கிடைக்காது. அது மட்டுமின்றி, இரவு நீடிக்கும் அந்த இரண்டு வாரங்களிலும் நிலவும் உறைபனிக் குளிர் அவற்றின் பாகங்களில் விரிசல்கள் விழச் செய்யலாம். இதனால் அவை விரைவிலேயே இறந்து விடும். உறைபனிக் குளிரில் இந்தக் கருவிகளால் இயங்க முடியாது என்பதையும் தாண்டி, அவற்றின் கட்டமைப்பிலேயே சேதங்கள் ஏற்படக்கூடும். உலோகங்களால் உறை பனிக் குளிர் வெப்பநிலையைத் தாங்க முடியாது. அதிலும் 200 டிகிரி செல்ஷியஸ் வரைக்கும் செல்லும்போது, அத்தகைய வெப்பநிலையில் அவை சேதமடையக்கூடும். இதனால், லேண்டர், ரோவரின் பாகங்கள் செயலிழக்க வாய்ப்புள்ளது.

ஆக அடுத்த இரண்டு வாரங்களில் ரோவரும் லேண்டரும் அனுப்பவுள்ள தரவுகள்தான் உலகளவில் இந்திய விண் வெளி ஆய்வு நிறுவனத்தை ஒரு புதிய பரிமாணத்திற்குக் கொண்டு செல்லப் போகின்றன. நன்றி:– பிபிசி

# சிதறடிக்கப்படும் தமிழ் கவனக் குவிப்பு

குருந்தூர்மலை வெடுக்குநாறி மலை' பறளாய் முருகன் கோயில்தையிட்டி திருகோணமலை. பெரியகுளம் உச்சிப் பிள்ளையார் மலை மாதவனை மயிலை த்தமடு மேய்ச்சல் தரை இராவணன் தமிழனா இல்லையா? மேர்வின் டி சில்வா தமிழர்களின் தலைகளைக் கொய்வாரா என்றிவ்வாறாக அண்மை காலங்களில் தமிழ்க்கட்சிகள் செயற்பாட்டாளர்கள் ஊடகங்களின் கவனம் வெவ்வேறு திசைகளில் ஈர்க்கப்படுகின்றது. கிழமைக்கு ஒன்று அல்லது நாளுக்கு ஒன்று என்று ஏதோ ஒரு விவகாரம் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்க்கிறது.

எங்காவது ஒரு புதிய விகாரை கட்டப்படுகிறது. அல்லது எங்காவது ஒரு தொல்லியல் சின்னம் அபகரிக்கப்படுகிறது. எங்காவது ஒரு நிலத்துண்டு அளவீடு செய்யப்படுகிறது அல்லது அல்லது பறிக்கப்படுகின்றது. அல்லது யாராவது ஒரு சிங்கள அரசியல்வாதி தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படையாகப் பேசுகிறார் இப்படியாக அடிக்கடி புதிதுபுதிதாக விவகாரங்கள் மேலெழுகின்றன. தமிழ் அரசியல்வாதிகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகங்களில் கவனங்கள் புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழ்ச்சமூகத்தின் கவனத்தை அடுத்தடுத்து புதிய விடயங்களின் மீது குவிய வைப்பதன் மூலம் திட்டமிட்டுத் தமிழ்ப் போராட்டசக்தி சிதறடிக்கப்படுகின்றதா? அரசாங்கம் திட்டமிட்டு ட்ரெண்ட்களை செற் பண்ணுகின்றதா?

சரத் வீரசேகர சொல்லுகிறார் இராவணன் ஒரு தமிழ் அரசன் இல்லையென்று. மேர்வின் டி சில்வா சொல்கிறார் விகாரைகள் கட்டப்படுவதை எதிர்த்தால் தமிழ் மக்களின் தலைகளைக் கொய்து வருவேன் என்று. நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் மினக்கெட்டுப் பதில் கூற வேண்டிய விடயங்கள் அல்ல. அவர்கள் திட்டமிட்டு தமிழ்மக்களின் கவனத்தை சிதறடிக்கிறார்கள். அவர்கள் திட்டமிட்டு தமிழ் மக்களை ஆத்திரப்படுத்துகிறார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் இது விடயத்தில் அரசாங்கம் விரும்புவது போல அல்லது சிங்கள பௌத்த தீவிரவாதிகள் விரும்புவது போல அவர்கள் இழுக்கும் திசைக்கெல்லாம் எடுபடக் கூடாது. நிதானமாக விடயங்களை அணுக வேண்டும். அரசாங்கம் அல்லது சிங்கள பௌத்த தேசியவாதிகள் திட்டமிட்டு ட்ரெண்ட்களை செட் பண்ணுகின்றார்கள். அந்த ட்ரெண்டின் பின் தமிழ்மக்கள் அலையத் தேவையில்லை. அலையவும் கூடாது.

இந்த விடயத்தில் ஒரு மையத்திலிருந்து முடிவெடுக்கும் மக்களாக. ஒரு மையத்திலிருந்து விவகாரங்களை விளங்கிக் கொள்ளும் மக்களாக. ஒரு மையத்திலிருந்து எதையும் அணுகும் மக்களாக தமிழ்மக்கள் திரள வேண்டும். பிரச்சினைகளை அவற்றின் தொகுக்கப்பட்ட வடிவத்தில் அவற்றுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த வரைபடம் ஒன்றுக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஏற்கனவே சிதறிப்போயிருக்கும் தமிழ் மக்களின் கவனத்தை மேலும் சிதறடிப்பதன் மூலம் அரசாங்கம் தான் விரும்பியதைச் சாதித்து விடும்.

இங்கே நான் கட்சிகளின் ஐக்கியத்தைப் பற்றிக் கதைக்க வரவில்லை. பல மாதங்களுக்கு முன் காரைநகர் பிரதேச சபையில் யாரைத் தவிசாளராகத் தெரிவது என்று விவகாரத்தின்போது தமிழ்த் தேசிய முன்னணியோடு நான் உரையாடினேன். அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் என்னிடம் சொன்னார் சாதி ஏற்றத்தாழ்வுகள் போன்ற விவகாரங்களில் நீங்கள் சுட்டிக் காட்டும் பிரச்சினைகளை நாங்கள் உடனடியாகத் தீர்த்து வைப்போம். ஆனால் ஐக்கியம் என்ற ஒரு விடயத்தை மட்டும் தயவு செய்து எங்களிடம் கேட்க வேண்டாம் என்று.

இக்கட்டுரை கட்சிகளின் ஐக்கியத்தைப் பற்றி உரையாடவில்லை. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது பற்றியே உரையாடவிழைகிறது. தேசியவாத அரசியல் என்றால் ஒரு மக்கள் கூட்டத்தை பெருந்திரளாகத் திரட்டுவது தான்.

தமிழ் மக்கள் ஒரு பெரும் திரளாக: தேசமாக விவகாரங்களை எதிர்கொள்ள வேண்டும்.நடைமுறையில் அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் பொழுது புனிதர்களையும் விசுவாசிகளையும் உண்மையானவர்களையும் மட்டும் வைத்து ஒரு தேசிய இயக்கத்தை கட்டியெழுப்புவது அம்புலி மாமாக் கதை தான்.

ஏனென்றால் ஒரு மக்கள் கூட்டம் எனப்படுவது பல்வேறு அடுக்குகளை கொண்டிருக்கும். பல்வேறு அபிலாசைகளை கொண்டிருக்கும். பல்வேறு நோக்குநிலைகளைக் கொண்டிருக்கும். ஒரு மக்கள் கூட்டத்தைத் தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ள முடியாது. அதற்குள் பல்பரிமாணம் இருக்கும் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்துக்குள் நல்லவர்களும் இருப்பார்கள் கெட்டவர்களும் இருப்பார்கள்.ஒரு நபர் ஒரே நேரத்தில் தேசியவாதி போலவும் இருப்பார் அதே சமயத்தில் ஆண் ஆதிக்கவாதியாகவும் இருப்பார்.ஒரு நபர் ஒரே நேரத்தில் சாதிவாதியாகவும் இருப்பார் தமிழ் தேசியவாதியாகவும் தோற்றம் காட்டுவார். ஒரு நபர் ஒரே நேரத்தில் மதவாதியாகவும் இருப்பார் தமிழ் தேசியவாதியாகவும் தோற்றம் காட்டுவார். தேசியவாதம் எனப்படுவது பல்வகைகளில் மீது ஒரு மக்கள் திரளைக் கட்டியெழுப்புவது என்ற கோட்பாட்டு விளக்கத்தின் அடிப்படையில் சிந்தித்தால் மதவாதி. சாதிவாதி. பிரதேசவாதி. ஆணாதிக்கவாதி போன்றவர்கள் தேசியவாதிகளாக இருக்கமுடியாது. ஆனால் தமிழ்க் கட்சிகளில் காணப்படும் முக்கியஸ்தர்களில் எத்தனை பேர் அவ்வாறு முழுமையாக தேசிய பண்பு



மிக்கவர்களாக இருக்கிறார்கள்? ஏன் ஆயுதப் போராட்டத்திலேயே அந்த பிரச்சினை இருந்ததுதானே? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் மத்தியில் காணப்பட்ட போராளிகள் எத்தனை பேர் அவ்வாறு தேசியப் பண்பு மிக்கவர்களாக காணப்பட்டார்கள்? இது ஒரு அடிப்படைப் பிரச்சினை.

ஒரு மக்கள் இயக்கம் என்று வரும் பொழுது ஒரு பெரிய கட்சி என்று வரும் பொழுது அதற்குள் நல்லதும் இருக்கும் கெட்டதும் இருக்கும். ஒரு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய இயக்கம் எனப்படுவது அந்த மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய நல்லதையும் கெட்டதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்பது யதார்த்தமாகும். ஒரு பெரிய மக்கள் இயக்கம் எனப்படுவது அல்லது ஒரு பெரிய தேசிய இயக்கம் எனப்படுவது முழுக்க முழுக்க கொள்கைவாதிகளையும் தூய்மைவாதிகளையும் புனிதர்களையும் மட்டும் வைத்து கட்டியெழுப்பப்படும் ஒன்று அல்ல. யதார்த்தத்தில் அது ஒரு மக்கள் கூட்டத்தில் காணப்படும் எல்லா அடுக்குகளையும் ஏதோ ஒரு மையத்தில் இணைப்பதாகவே காணப்படும். இது தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கும் பொருந்தும்.

புனிதர்களையும் நல்லவர்களையும், கொள்கைவாதிகளையும், இலட்சியவாதி ளையும் மட்டும்வைத்து ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டமுடியாது. ஆனால் குறிப்பிட்ட இயக்கத்தில் அல்லது கட்சியின் மையத்தில் இருப்பவர்கள் அல்லது வழிகாட்டும் பொறுப்புகளில் இருப்பவர்கள் ஒப்பீட்டளவில் அதிகம் தேசிய பண்பு மிக்கவர்களாக இருக்கவேண்டும் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாகும். ஒரு கட்சியின் அல்லது மக்கள் இயக்கத்தின் முடிவெடுக்கும் பொறுப்புகளில் இருப்பவர்கள் கொள்கைவாதிகளாக இலட்சியவாதிகளாக தேசிய பண்பு ஒப்பீட்டுளவில் அதிகம் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயம். கட்சித் தொண்டர்கள் ஆதரவாளர்கள் எல்லாரிடமும் அவ்வாறு எதிர்பார்க்க முடியாது. அவர்களிடமிருக்கும் எதிர்த் தேசிய அம்சங்களைக் களை நீக்கம் செய்ய வேண்டியது அல்லது இருள் நீக்கம் செய்ய வேண்டியது மையக் குழுவின் பொறுப்பு. அல்லது தலைமை தாங்கும் நபர்களின் பொறுப்பு. எனவே ஐக்கியத்தை கட்டியெழுப்பும் பொழுது அந்த ஐக்கியத்துக்குள் பலதும் பத்தும் இருக்கும் என்ற யதார்த்தத்தை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு ஐக்கியத்தைக் கட்டியெழுப்பிய பின் அந்த ஐக்கியத்திற்கு தலைமை தாங்கும் தரப்புகள் அந்த ஐக்கியத்தை எப்படிக்

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



கொள்கை அடிப்படையில் பலப்படுத்துவது இறுக்கமாக்குவது என்று சிந்திக்கலாம். புனிதர்களையும் நீதிமான்களையும் மட்டும் வைத்துக் கொண்டு ஐக்கியத்தை கட்டியெழுப்பலாம் என்றால் தமிழ்மக்கள் என்றைக்குமே ஒரு பெருந்திரளாக வர முடியாது. நீதிமான்களிடந் தான் நீதியைக் கேட்கலாம் என்றால் தமிழ் மக்கள் யாகந்தான் செய்யவேண்டும்.

எதிரிக்கு எதிரான கோபந்தான் கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் பெருந்திரளாகக் கூட்டிக்கட்டி வைத்திருக்கிறது. அதாவது இன எதிர்ப்புணர்வு அல்லது இனமான உணர்வு போன்றவை தான் தமிழ் மக்களைப் பெருமளவுக்கு ஒரு தேசமாகத் திரட்டி வைத்திருக்கின்றன. மாறாக தேசியவாதம் தொடர்பான அறிவு பூர்வமான விஞ்ஞானபூர்வமான கொள்கைகளை விளங்கி தமிழ்மக்கள் ஒரு பெருந் திரளாக மேல்லெழுந்தார்கள் என்பது உண்மையல்ல. உலகம் முழுவதிலும் உள்ள பெரும்பாலான எல்லாத் தேசியஇன விடுதலைப்போராட்டங்களுக்கும் இது பொருந்தும். கருத்து மக்களை திரட்டுவதை விடவும் எதிரிக்கு எதிரான கூட்டுணர்ச்சி ஒரு மக்கள் கூட்டத்தை இலகுவாகத் திரட்டிவிடும்.

ஒரு பெருந்திரளைக் கட்டியெழுப்புவது அல்லது ஒரு பேரியக்கத்தை கட்டியெழுப்புவது அல்லது ஒப்பீட்டளவில் பெரிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவது அதாவது தமிழ்மக்களை ஆகக்கூடியபட்சம் ஒரு பெருந்திரளாகக் கட்டியெழுப்புவது என்பது கொள்கையின் அடிப்படையில் அல்லது. புனிதமான. விட்டுக் கொடுக்கப்பட்ட அளவுகோள்களின் அடிப்படையில் என்றைக்குமே சாத்தியப்படப் போவதில்லை. தமிழ்மக்கள் மத்தியில் மட்டுமல்ல இப்பூமியில் எந்த ஒரு மக்கள் கூட்டத்தையும் அவ்வாறு புனிதமான அளவுகோல்களின் அடிப்படையில் நிறுவனமயப்படுத்த முடியாது.

இது மக்கள் இயக்கங்களுக்கு மட்டுமல்ல மத நிறுவனங்களுக்கும் பொருந்தும். உலகில் உள்ள எல்லா மத நிறுவனங்களிலும் அதன் மூலப்புத்தகங்களில் உள்ள புனிதமான அம்சங்கள் பேணப்படுகின்றனவா? மதங்களில் மட்டுமல்ல மதங்களை நிராகரித்த இடதுசாரி இயக்கங்கள் மத்தியிலும் அதே பிரச்சினை உண்டு.

மக்களை நிறுவனமயப்படுத்தும் பொழுது அந்த மக்கள் மத்தியில் இருக்கும் பலங்களை மட்டுமல்ல. பலவீனங்களையும் சேர்த்து நிறுவனமயப்படுத்தாமல் இருப்பது என்பது மிகவும் சவால் மிகுந்தது. ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருக்கும் பலவீனங்களையும் ஏற்றுக் கொண்டு அவர்களை நிறுவனமயப்படுத்திய பின் தலைமை தாங்கும் பொறுப்பில் இருப்பவர்கள் அந்த பலவீனங்களை படிப்படியாக அகற்ற வேண்டும். அது தான் நடைமுறைச் சாத்தியமானது.

தமிழ்மக்கள் மத்தியில் இதுவரையிலும் தோன்றிய எல்லா ஐக்கியங்களும் எல்லா சிவில் கட்டமைப்புகளும் மக்கள் (22ம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர் சமூகத்தின் உதவிகள் –1

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகப் புலம்பெயர் சமூகம் இலங்கையில் உள்ள மக்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. இந்த உதவிகள், போராட்டத்துக்கான பங்களிப்பாக, போர் நெருக்கடிகளைத் தீர்ப்பதா, சுனாமி மற்றும் கொரோனா கால பேரிடர்களில் துயர் களைவதாக எனப் பல வகையில் இருந்து வருகிறது.

இது மட்டுமல்ல, இந்தப் பாதிப்புகளுக்குட்பட்ட மக்களை மீள் நிலைப்படுத்துவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் கல்வி, மருத்துவம், வாழ்வாதாரம், சமூக மேம்பாடு எனப் பலவற்றுக்காகவும் உதவுகிறது. கூடவே துறைசார் அறிவுப் பகிர்தலையும் இப்பொழுது ஆற்றி வருகிறது. இவற்றைப் பற்றி இந்தத் தொடர் விவாதிக்கிறது. புலம்பெயர் சமூகம் இன்று மிகப் பெரிய சக்தியாகும். பொருளாதாரத்தில் பல்வேறு வகையான உதவித் திட்டங்களிலும் நலத்திட்டங்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் பல உதவித்திட்டங்களையும் நலத்திட்டங்களையும் முன்னெடுக்கக் கூடியதாகவும் உள்ளது. கூடவே நாட்டில் (இலங்கையில்) பெரிய அளவில் முதலீடுகளை மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு வலுவானதாகவும் இருக்கிறது.

இதைப் போல அறிவுசார் பங்களிப்பை வழங்கக் கூடிய நிலையிலும் அரசியல் ரீதியாகத் தாக்கங்களை உண்டாக்கக் கூடிய சூழலிலும் உள்ளது. அதிலும் புலம் பெயர் சமூகத்தின் இரண்டாம் தலைமுறையினர் இதில் முன்னணியில் உள்ளனர்.

அந்தந்த நாடுகளில் கல்வி கற்றும் துறை சார் பணிகளில் ஈடுபட்டும் தமது அறிவை விருத்தி செய்துள்ளனர். இந்த இரண்டாம் தலைமுறையினரே அரசியல் ரீதியாகவும் செல்வாக்கைப் பெற்று வருகின்றனர். கனடாவில் ஹரி ஆனந்தசங்கரி, ராதிகா சிற்சபேசன், லோகன் கணபதி, விஜே தணிகாசலம் தொடக்கம் பலர் உள் ளனர். இந்த எண்ணிக்கையும் இந்தப் போக்கும் மேலும் உயரும்.

ஆனால் இதையெல்லாம் ஒழுங்கமைத்து வலுவாகத் திரட்சியடைய வைக்கக் கூடிய அரசியல் ஒருங்கிணைப்போ கட்டமைப்பாக்க உணர்வோ இல்லாமல் சிதறுண்ட நிலையிலேயே அது காணப்படுகிறது. இது தான் மிகப் பெரிய பலவீனம்.

அதாவது, மிகப் பெரிய சக்தியாகக் காணப்படும் புலம்பெயர் சமூகம், தன்னுடைய சக்தியைத் திரட்டிக் கொள்ள முடியாமல் பலவீனமான நிலையிலேயே வைத்துக் கொண்டிருக்கிறது. இது அதன் மீதான குற்றச்சாட்டல்ல. அதனுடைய மெய்நிலையைப் பற்றிய அவதானிப்பாகும். இதைச் சுட்டிக் காட்டுவதன் மூலமாக எதிர்காலத்தில் அதனைச் சீராக்கி வலுவாக்கம் செய்ய வேண்டும். அது முடியும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடே இது.

இதற்கு இலங்கையிலோ அல்லது புலம்பெயர் சூழலிலோ ஆளுமையும் ஆற்றலும் நம்பிக்கையும் உள்ள தலைமை வேண்டும். அப்படியான தலைமை இல்லை என்பது மிகப் பெரிய குறைபாடே. இதனால் தான் இந்தப் பெரிய பலத்தை, அதன் பயனை பெறமுடியாமல் தமிழ்ச்சமூகம் உள்ளது.

புலம்பெயர் மக்கள் பல்வேறு தளங்களில், பல்வேறு நோக்கு நிலையில் தாயகத்துக்கான உதவிகளைச் செய்கின்றனர். சிலர், தமிழர் தாயகம் என்ற அடிப்படையில் வடக்குக் கிழக்கில் மட்டும் தமது உதவித் திட்டங்களை மேற்கொள்கின்றனர். இவர்களில் பலர் தமிழீழக் கனவோடு செயற்பட்டவர்கள். அதற்குப் பங்களித்தவர்கள். இப்பொழுது அந்தக் கனவுக்காகத் தம்மைப் பலியிட்டோருக்கும் அந்தக் கனவினால் பாதிக்கப்பட்டோருக்கும் உதவுகின்றனர். கூடவே தமிழ்ப் பிரதேசங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும் என்றும் விரும்புகின்றனர்.

இன்னொரு சாரார், வடக்கிற்கு மட்டும் உதவிகளையும் நலத்திட்டங்களையும் செய்கிறார்கள். இதை நாம் பிரதேச வாதமாகவோ அப்படியான சிந்தனையின் பாற்பட்டதாகவோ கொள்ள வேண்டியதில்லை. ஏனென்றால் இவர்கள் தமக்குச் சாத்தியப்பட்ட எல்லைக்குள் தம்மால் முடிந்த உதவிப் பணிகளையும் நலத் திட்டங்களையும் மேற்கொள்ள விரும்புகின்றனர்.

இப்படித் தான் இன்னொரு தரப்பினர் கிழக்கிற்கென உதவுகின்றனர். வேறொரு தரப்பினர் மலையகம் உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கு முழுவதிலும் உதவிப் பணிகளைச் செய்கின்றனர். இன்னொரு தரப்பினர் போராட்டப் பங்களிப்பு என விடுதலைப் புலிகள் இயங்கிய போது அவர்களுக்கும் அவர்களுடைய கட்டமைப்புகளுக்கும் உதவினர். அவர்கள் இல்லாத சூழலில் போரினால் பாதிக்கப்பட்டோருக்கென உதவுகின்றனர். இதில் சிலர் தமக்குத் திருப்தியளிக்கக் கூடிய அரசியல் கட்சிகளுக்கும் உதவுகின்றனர். வேறு சிலர் தனிப்பட தமக்குக் கிடைக்கின்ற தொடர்புகள், அறிமுகங்களின் வழியாக உதவுகின்றனர். இப்படிப் பல வகைப்படுகிறது இந்த உதவித்திட்டங்கள்.




இதை விட ஊர் சார்ந்த உதவிகள், தாம் படித்த பாடசாலைகள், தமது விளையாட்டுக் கழகங்கள், தமக்கு இணக்கமான அமைப்புகள் மற்றும் மருத்துவ உதவிகள் என்ற வகையிலும் உதவிப் பணிகள் விரிவடைகின்றன.

எப்படியோ இந்த உதவிகள் அனைத்தும் இங்கே தாய் மண்ணிற்கே — தாய்நாட்டில் வாழும் மக்களுக்கே — கிடைக்கின்றன.

அப்படியென்றால் இந்த உதவிகளின் மூலமாக இந்த மக்களும் இந்த மண்ணும் வளம் பெற்றிருக்க வேண்டுமே! இந்த உதவிகள் பல வகைப்பட்டனவாக இருப்பதால் அந்தந்த அடிப்படையில் முன்னேற்றமோ மாற்றமோ ஏற்பட்டிருக்க வேண்டும் அல்லவா!

உச்ச பட்சமான மாற்றமோ வளர்ச்சியோ ஏற்படவில்லை என்றாலும் குறைந்த பட்சமாகவேனும் வளர்ச்சியும் மாற்றமும் தென்பட்டிருக்க வேண்டும் அல்லவா! அப்படி ஏதும் நிகழ்ந்துள்ளதா? அப்படி நிகழவில்லை என்றால் அதற்கு யார் பொறுப்பு? அல்லது அதற்குக் காரணம் என்ன? அந்தக் காரணத்தை கண்டறிவதற்கான முயற்சிகள் ஏதேனும் நடந்துள்ளதா? இப்பொழுது கூட இதை உணர்ந்து இதைச் சீர்செய்யக் கூடிய முயற்சிகள் ஏதும் நடக்கிறதா? அல்லது அப்படியான ஒரு முயற்சி தொடங்கப்பட வேண்டும் என்று சிந்திக்கப்படுகிறதா?

நானறிந்த வகையில் அப்படி எதுவும் நடப்பதாகவோ நடக்கக் கூடியதாகவோ தெரியவில்லை. இது துயரமளிக்கக் கூடிய நிலையே!

வளமும் வாய்ப்பும் உள்ள ஒரு பெரிய சமூகப் பங்களிப்பை ஒருங்கிணைக்க முடியாமல் அதைச் சிதற விடுவதென்பது பெரிய இழப்பு மட்டுமல்ல, பொறுப்பற்ற தனத்தின் வெளிப்பாடுமாகும். அதுவும் நீண்டகாலமாகவே இனவொடுக்கு முறைக்கும் அந்த ஒடுக்குமுறையினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடை, போர் போன்றவற்றாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த வளத்தையும் வாய்ப்பையும் பெற்றுக் கொடுக்கத் தவறுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

தமிழ் அரசியற் கட்சிகள் பலவுண்டு. 2009 க்குப் பின்னர் மேலும் பல கட்சிகள் முளைத்துள்ளன. ஏற்கனவே விடுதலைப் போராட்ட அரசியல் வழிமுறைக் கூடாக வந்த கட்சிகளும் தலைவர்களும் உள்ளனர். ஐம்பது, அறுபது, எழுபது ஆண்டுப் பாரம்பரியத்தை உடைய கட்சிகளும் மூத்த தலைவர்களும் இருக்கின்றனர். இப்படியெல்லாம் (இவர்கள் எல்லாம்) இருந்தும் என்ன பயன்? இவர்களாலும் இந்தக் கட்சிகளாலும் ஒரு ஒழுங்கான கட்டமைப்பை உருவாக்க முடிந்ததா? போர் முடிந்த பிறகு இவர்களுக்குத்தானே மக்கள் வாக்களித்தார்கள்? தமது ஆதரவை வழங்கினார்கள்? எதற்காக? இவர்கள் மீதான நம்பிக்கையினால்! ஆனால் அந்த நம்பிக்கைக்கு ஏற்ற மாதிரிப் பொறுப்புடன் இவர்களும் இந்தக் கட்சிகளும் நடக்கவில்லை.

2009இல் போரின் முடிவில் தமிழ்ச் சமூகம் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டதையும் விட மிக மோசமான நிர்க்கதி நிலையை இன்று அடைந்துள்ளது. இப்பொழுது பல துண்டுகளாக உடைந்து சிதறிப் பலவீனமடைந்துள்ளது. இந்த நிலைக்குக் கொண்டு வந்ததில் இந்தத் தலைவர்களுக்கும் இந்தக் கட்சிகளுக்கும் பொறுப்புண்டு. அதைப் போலப் புலம்பெயர் நாடுகளில் உள்ள தன்முனைப்பாளர்களுக்கும் இந்தத் தவறில் பொறுப்புண்டு.

உண்மையில் புலம்பெயர் சமூகத்தின் பொருளாதார, அறிவியல், அரசியல் பலத்தை ஒழுங்கமைத்துக் கட்டமைத் திருக்க முடியும். அதைத் திரட்சியாக்கி யிருக்கலாம். இதைக்குறித்து நிலாந்தன் போன்ற ஒரு சிலர் மட்டுமே பேசியுள்ளனர். அல்லது சுட்டிக் காட்டியுள்ளனர். ஏனைய அறிவாளர்கள் இதைக் கண்டும் காணாததைப் போலவே கடந்து செல்கின்றனர்.

பல்கலைக்கழகங்களும் அவற்றிலுள்ள துறைசார் அறிவாளர்களும் அவற்றின் மாணவர் அமைப்புகளும் இந்த விசயத்தில் அக்கறை கொள்ளவில்லை. விவசாயம், பொருளியல், கடற்றொழில், சமூகவியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் உள்ளோர் இதைக்குறித்துச் சிந்தித்திருக்கவும் செயற்பட்டிருக்கவும் வேண்டும்.

போர் முடிந்த கையோடு, தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் குறித்தும் முதலீடுகளைச் செய்வதற்கான அகப்புற நிலைகளைக் குறித்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு புலம்பெயர் தேசங்களிலிருந்து ஒரு அணி வந்து கலந்துரையாடலை மேற்கொண்டது. அது ஒரு நல்ல தொடக்கம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது அடுத்த கட்டத்துக்கு நகரவேயில்லை. இதில் அரச ஆதரவுச் சக்திகளும் அக்கறை காட்டவில்லை. அரச எதிர்ப்புச் சக்திகளும் அக்கறை கொள்ளவில்லை. ஆக மொத்தத்தில் அனைத்துத் தரப்பும் மக்களின் மேம்பாட்டைக் குறித்துச் சிந்திக்க மறுப்பதில் ஒரே விதமாகவே உள்ளன. (தொடரும்)

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
பிரதி வெள்ளிக்கிழமைகளில்
அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும்
வழமை போல் பெற்றுக் கொள்ளலாம்.
eelanadu.ca என்ற இணையத்
தளத்திலும் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு:-
T.K.பரமேஸ் 416 841 9600

# அமித்ஷாவின் கூற்று:- புரிந்து கொள்ளப்பட்டதும் புரிந்து கொள்ளப்படாததும்

பாரதிய ஜனதா கட்சியின் இரண்டாம் நிலை தலைவரும், உள்துறை அமைச்சருமான, அமித்ஷா, தெரிவித்திருந்த கருத்துக்கள் பலரது கவனத்தை பெற்றிருந்தது. கடந்த மாதம் 27ம் திகதி, இராமேஸ்வரத்தில் இடம் பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் ஈழத் தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொல்லப்பட்டதாக, அமித்ஷா கூறியிருந்தார். பாரதிய ஜனதா கட்சி, ஈழத் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை இடம் பெற்றதை ஏற்றுக் கொண்டிருப்பதாக சிலர் இதற்கு விளக்கமளிக்க முற்பட்டனர். சிலரோ, இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக கூற முற்பட்டனர்.

இந்தக் கருத்து எவ்வாறானதொரு சூழலில் முன் வைக்கப்பட்டது என்பதை உற்றுநோக்க வேண்டும். தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்கான உக்திகள் திட்டமிடப்படும் சூழலில் தான், அமித்ஷா இவ்வாறானதொரு கருத்தை தெரிவித்திருக்கின்றார்.

அமித்ஷாவின் கருத்தை இன்னும் சற்று ஆழமாக நோக்கினால், தமிழ் நாட்டில், பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காக பாடுபட்டு வரும், பாரதிய ஜனதாவின் தமிழ் நாட்டு தலைவர் அண்ணாமலைக்கு ஆதரவாகவே அவ்வாறானதொரு கருத்தை முன் வைத்திருக்கின்றார். அண்ணாமலை சில தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருக்கின்றார். அண்மையில் இங்கிலாந்தில் புலம்பெயர் தமிழர்களோடு உரையாடியிருந்தார். பிரித்தானியாவை தளமாகக் கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், அவருக்கு பெரிய வரவேற்றை வழங்கியிருந்தன.



அதிகாரத்திலிருக்கும் பாரதிய ஜனதா கட்சியுடன் நெருங்கினால், இந்தியாவின் ஆசிர்வாதத்தை பெறலாமென்னும் புரிதலொன்று தமிழ்ச் சூழலில் ஒரு பார்வையாக இருக்கின்றது. அதற்காக சிலர், தங்களது புரிதலுக்குட்பட்ட முயற்சிகளையும் மேற் கொண்டு வருகின்றனர். அண்ணாமலைக்கான வரவேற்பின் பின்னணியும் இது தான்.

பாரதிய ஜனதா கட்சியை பொறுத்தவரையில், ஈழத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு, அப்போது ஆட்சியிலிருந்த, காங்கிரஸ் கட்சியும், அதனுடன் கூட்டு வைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் தான் காரணம். இந்தக் கருத்தைத் தான் அமித்ஷா, இராமேஸ்வரத்தில் சுட்டிக் காட்டியிருந்தார். இந்த இடத்தில் அமித்ஷாவின் கருத்தை முன்னிறுத்தி சிந்திக்க முற்படுவோர், திராவிட முன்னேற்றக் கழக்கத்தின் மீதான குற்றச்சாட்டை எவ்வாறு நோக்கப் போகின்றனர்? அதனை ஏற்றுக் கொள்கின்றனரா அல்லது நிராகரிக்கின்றனரா? ஏற்றுக் கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்நிலையிலேயே நிற்க வேண்டிவரும். ஏனெனில், பாரதிய ஜனதா கட்சியின் ஈழத் தமிழர் ஆதரவு நிலையென்பது, மிகவும் தெளிவாக, காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு எதிரானது.

இந்தியாவை பொறுத்தவரையில் பாரதிய ஜனதா கட்சி மிகவும் செல்வாக்குமிக்க கட்சி. பாரதிய ஜனதா கட்சியை சவாலுக்குள்ளாக்கக் கூடிய வகையில் பிறிதொரு தனிக்கட்சி இல்லை. காங்கிரஸ் பிராதான கட்சியாக இருந்தாலும் கூட, ஒப்பீட்டடிப்படையில் பலவீனமாகவே இருக்கின்றது. இந்த நிலையில் தான், நடைபெறவுள்ள தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து, இந்தியா என்னும் ஒரு கூட்டை உருவாக்கியிருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில், ஒப்பீட்டு அடிப்படையில், பாரதிய ஜனதா கட்சி நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது. கடந்த தேர்தலில் வெற்றி பெற்றது போன்று, இம்முறை, பாரிய வெற்றியை பெற முடியாதென்னும்



கணிப்புக்கள் முன் வைக்கப்படுகின்றன.

தமிழ் நாட்டை ஆளும் திராவிட முன்னேற்றக்கழகம், இந்தியா கூட்டில் முக்கிய பங்காளியாகும். இந்த பின்புலத்தில் தான், ஈழத் தமிழரின் கண்ணீருக்கு இவர்கள் பதில் கூற வேண்டுமென்னும் பிரச்சாரத்தை பாரதிய ஜனதாவின் தமிழ் நாட்டு தலைமை கையிலெடுத்திருக்கின்றது.

இது ஈழத் தமிழ் மக்களுக்கு சாதகமானதா? சாதகம் தான். இந்தியாவின் செல்வாக்குமிக்க கட்சி. அதே வேளை, பெரும்பாண்மையான இந்து மக்களின் ஆதரவை பெற்றிருக்கும் கட்சியொன்றின் இரண்டாம் நிலைத் தலைவர், இவ்வாறானதொரு கருத்தை கூறுகின்றார் என்றால், அது சாதகமான விடயம் தான். ஆனால் பெருந்தொகையில் கொலையை எதிர்கொண்ட மக்கள் கூட்டமொன்றிக்கான நீதியென்ன என்பது தான் இந்த இடத்தில் எழும் கேள்வி? அந்த நீதி தொடர்பில் பாரதிய ஜனதா கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன என்பது தான் கேள்வி?

ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன, என்பது இரகசியமான ஒன்றல்ல. அதே வேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் போது, இந்தியா எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கின்றது என்பதும் இரகசியமானதல்ல. இது தொடர்பான கேள்விக்கு, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. ஜெயசங்கள் பதிலளித்திருக்கின்றார். அதாவது, இலங்கையை நாங்கள், இன அடிப்படையில் நோக்குவதில்லை. இலங்கை என்னுமடிப்படையிலேயே விடங்களை அணுகுகின்றோம். இது எமது நிலைப்பாடு மட்டுமல்ல மாறாக, முன்னைய அரசாங்கங்கள், இலங்கை தொடர்பில் எவ்வாறான கொள்கை நிலைப்பாட்டை கொண்டிருந்தனவோ, அதனையே, பாரதிய ஜனதா கட்சியும் தொடர்கின்றது. இந்தக் கூற்றோடு, அமித்ஷாவின் கருத்தை தொடர்புபடுத்தினால், ஷாவின் கருத்துக்கள் முற்றிலும் உள்நாட்டு அரசியலை எதிர் கொள்ளும் உபாயத்துடன் தொடர்புபடுவதை நாம் காணலாம்.

ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு இதுவரையில் 13வது திருத்தச்சட்டத்தை தாண்டிச் செல்லவில்லை. பிரதமர் மோடி, கூட்டுறவு சமஸ்டியின் மீதான ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருந்தாலும் கூட, அவர் தனது பார்வையின் அடிப்படையாக, இந்தியாவில் தற்போது நடைமுறையிலிருக்கும் மானில ஆட்சி முறைமையே சுட்டிக் காட்டுகின்றார். ஆனால் இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன் விளைவான 13வது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனை புரிந்துகொண்டு தான், அமித்ஷாவின் கூற்றை உற்றுநோக்க வேண்டும்.

இந்தியா 13வது திருத்தச்சட்டத்தை வலியுறுத்தினால், ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து விலகிச் செல்வார்கள், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஈழத் தமிழரில்தான் தங்கியிருக்கின்றது இப்படியெல்லாம் கூறி, நம்மவர்கள் சிலர், சுயதிருப்தி கொண்டாலும் கூட, இந்தியாவின் அடிப்படையான நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லை. வல்லரசுகளின் அயலுறவுக் கொள்கை பிராந்திய ரீதியில் மற்றும் உலகளவில் ஏற்படும் அரசியல் மாறங்களினால் மட்டுமே நிகழ முடியும். அவ்வாறான சூ ழலில், இந்தியாவே, அதன் நிலைப்பாட்டை மாற்றியமைக்கும். இந்திராகாந்தி காலத்து இந்தியாவின் அணுகுமுறை அவ்வாறான ஒன்றுதான்.

அதே வேளை, நாடுகளின் அணுகுமுறையை நோக்குகின்ற போது, அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை உற்றுநோக்க வேண்டும். தமிழ்ச் சூழலில் இந்த விடயத்தை புரிந்து கொள்வதிலும் தெளிவின்மை காணப்படுகின்றது. அரசாங்கத்தை பிரதிநித்துவப்படுத்துவர்கள், தேர்தல்களின் போது, தங்களின் ஆட்சியை தக்கவைப்பதற்காக பல்வேறு வாக்குறுதிகளை வழங்குவார்கள், பல கருத்துக்களை முன் வைப்பார்கள். ஆனால் அரசுக்கான அணுகுமுறை ஒன்றுண்டு. கொள்கை நிலைப்பாட்டை முன்னெடுப்பதில் அரசே முதன்மையானது. சிறிய நாடுகளில் வேண்டுமானால், அரசாங்கங்கள் தங்களின் விருப்பங்களுக்கு ஏற்ப, சில தீர்மானங்களை நிறைவேற்ற முடியும். ஆனால், பெரிய நாடுகளின் கொள்கை நிலைப்பாட்டில் சாதாரணமாக ஒரு போதும் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. இதனால் தான், வெளிவிவகாரக் கொள்கையை ஒரு தொடர் நிகழ்வென்பார்கள். இந்த தொடர் நிகழ்வில் பிரதமர்கள் எவராகவும் இருக்கலாம் ஆனால் அவர்கள் நினைத்தவுடன் கொள்கை நிலைப்பாடு மாறிவிடாது.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் பலம்பொருந்திய நாடுகள் அனைத்தும், இலங்கையின் ஆட்சியதிகாரத்தை தீர்மானிக்கும் பெரும்பாண்மை மக்களை அடிப்படையாகக் கொண்டே, தங்களின் கொள்கை முடிவுகளை மேற்கொள்கின்றனர். இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. இந்திராகாந்தி காலத்தில் மட்டும் தான், இந்தியா தமிழ் மக்களுக்கு பிரத்தியேக முக்கியத்துவத்தை வழங்கியிருந்தது. அன்றிருந்த அரசியல் சூழலே அதற்கு காரணம். குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவிற்கு எதிர்நிலையில் பயணிக்க முற்பட்டதன் காரணமாகவே அவ்வாறானதொரு சூழல் உருவாகியது.

அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால்

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இந்தியா மீளவும் கடுமையான தீர்மானங்களை நிச்சயம் எடுக்கும். 1987இன் அனுபவங்களுக்கு பின்னர், தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனமாகவே செயற்பட்டு வருகின்றனர். மகிந்த ராஜபக்சவின் சீன சார்பு நிலைப்பாட்டால் இந்தியா அதிருப்தியுற்றாலும் கூட, நிலைமைகள் இந்தியாவின் கட்டுப்பாட்டை மீறி, அதிகம் சென்று விட்டதாக கூறி விட முடியாது. பாதுகாப்பு விடயங்களில் சிக்கலான நிலைமை உருவாகினால் மட்டுமே இந்தியா கடுமையான தீர்மானங்களுக்கு செல்ல நேரிடும்.

அமித்ஷாவின் கருத்துக்களில் புளகாங்கிதம் அடைய ஒன்றுமில்லை. அதே வேளை, இந்தியாவின் ஆளும் தரப்போடு தொடர்புகளை பேணிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வதிலும் தவறில்லை. ஆனால் வெறுமனே, அவர்களது தேர்தல் தந்திரோபாயங்களுக்கான துருப்புச் சிட்டாக மட்டும் சுருங்கிப் போகாத வகையிலும் எமது நகர்வுகள் அமைய வேண்டும்.

தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கை நிலைநிறுத்தும் முயற்சியில் தான், பாரதிய ஜனதா கட்சி தற்போது, ஈழத் தமிழர் பக்கம் திரும்பியிருக்கின்றது. பாரம்பரியமாக தமிழ் நாட்டின் ஈழ ஆதரவு கட்சிகளாக திராவிட கட்சிகள் மட்டுமே இருந்திருக்கின்றன. பாரதிய ஜனதா கட்சி, இதில் ஒரு உடைவை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. திராவிட கட்சிகள், தற்போதைய சூழலில் மத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியாத நிலையிலிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதன் மூலம், இதுவரையில் திராவிட கட்சிகள் வசமிருந்த, ஈழ ஆதரவுக் கரிசனையை, தமிழ் நாட்டு பாரதிய ஜனதா கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சியில் அண்ணாமலை கடுமையாக உழைக்கின்றார்.

இதன் காரணமாகவே, தங்களின் தமிழ் நாட்டுக்கான தேர்தல் பிரச்சார திட்டத்தில், ஈழத் தமிழ் அவலத்தை பிரதான பேசு பொருளாக்கியிருக்கின்றனர். ஈழத் தமிழ் செயற்பாட்டாளர்கள் நிலைமையை நிதானமாக கையாள வேண்டும். அனைவரும் நமக்குத் தேவையென்று சிந்திக்க வேண்டும். ஏனெனில் எமது உறவு இந்தியாவுடனானது.

# திறக்கப்படும் புதிய மோதுகளம்




சீனாவின் சினோபெக் நிறுவனம் வரும் செப்டெம்பர் 20ஆம் திகதி எரிபொருள் விற்பனையை இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளது. கடந்த மாதமே, சினோபெக் நிறுவனம், இலங்கையில் எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைக்கும் நடவடிக்கைகளை தொடங்கி விட்டது.

எரிபொருள் சந்தையில், சுமார் 100 மில்லியன் டொலரை முதலீடு செய்யும் சினோபெக் நிறுவனத்துக்கு, ஏற்கனவே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் உள்ள 150 எரிபொருள் விற்பனை நிலையங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் 50 எரிபொருள் விற்பனை நிலைய ங்களை புதிதாக அமைப்பதற்கும், அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் ஊடாக இலங்கையின் எரிபொருள் சந்தையில் சில்லறை விற்பனையில் கால் வைக்கப் போகிறது சீனா. ஏற்கெனவே உள்நாட்டு எரிபொருள் சந்தையில் இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனம் விற்பனையில் ஈடுபட்டு வருகிறது. அதுவும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் தான் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

2001 2004 காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பதவியில் இருந்த போது, எரிபொருள் சந்தையில் இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனத்தை அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கிகளும், 35 வருட குத்தகைக்கு ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

இலங்கையில் 211 எரிபொருள் விற்பனை நிலையங்களைக் கொண்டிருக்கிறது லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம். இப்போது.

இரண்டாவதாக இலங்கையில் காலடி எடுத்து வைத்திருக்கிறது சீனாவின் சினோபெக்.

அவுஸ்ரேலியாவின் யுனைட்டெட் பெற்றோலியம் மற்றும் அமெரிக்காவின் ஷெல் நிறுவனத்துடன் இணைந்த ஆர். எம் .பார்க் ஆகிய நிறுவனங்களும் உள்நாட்டு எரிபொருள் சந்தையில் காலடி வைக்கவுள்ளன.

இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனம் ஒரு எரிபொருள் விற்பனை நிறுவனமாக இலங்கையில் காலடி வைத்திருந்தாலும், அது ஒரு மூலோபாயத் திட்ட நடவடிக்கையாகவே காணப்பட்டது. திருகோணமலை துறைமுகம் மற்றும் எண்ணெய் தாங்கிகளை வேறெந்த நாடும் கைப்பற்றி விடக் கூடாது என்பதில் இந்தியா கவனமாக இருந்தது.

1987 இந்திய — இலங்கை உடன்பாட்டின் மூலம், திருகோணமலை துறைமுகம் வெளியாரின் கைக்குச் செல்ல முடியாதபடி கட்டுப் போட்டது புதுடெல்லி. அதற்குப் பின்னர், 2000ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் பலம் வாய்ந்த இராணுவக் கட்டமைப்பாக மாறியிருந்த போது, திருகோணமலையின் பாதுகாப்பு கேள்விக்குறியானது.

இந்தச் சூழலில் ரணில் விக்கிரமசிங்க, மிகத் தந்திரமாக, இந்தியாவிடம் எண்ணெய் தாங்கிகளைக் குத்தகைக்கு கொடுத்தார். இதன் மூலம், விடுதலைப் புலிகள் அவற்றின் மீது தாக்குதல் தொடுக்க முடியாத நிலையை உருவாக்கினார்.

அவற்றின் மீது கை வைத்தால், இந்திய நலன்களின் மீதான நடவடிக்கையாக அது கருதப்படும் என்பதால், 2006இல் திருகோணமலையில் தாக்குதல்களை நடத்திய போது கூட, விடுதலைப் புலிகள், சீனக்குடா எண்ணெய் தாங்கிகளை தவிர்க்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இலங்கையினதும் இந்தியாவினதும் பாதுகாப்பு மூலோபாய நடவடிக்கையாகவே, லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், இலங்கையின் எரிபொருள் சந்தையில் காலடி வைத்தது.

இந்த நிறுவனம் செயற்படத் தொடங்கிய காலத்தில் இருந்தே, கணிசமான இலாபத்தையும் பெற்று வந்திருக்கிறது.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மோசமான நிர்வாகத்தினால், கடந்த காலங்களில் பாரிய நட்டத்தை சந்தித்து வந்திருக்கிறது. அண்மையில் பாகிஸ்தானுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன, கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றியிருந்தார்.

அண்மையில் அந்தப் பணியில் இருந்து அவர் விடுவிக்கப்பட்ட போது, நட்டத்தில் இயங்கி வந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இந்த ஆண்டில், ஜூலை 28ஆம் திகதி வரை, 73 பில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றிருப்பதாக கூறியிருந்தார். இது கடந்த 5 தசாப்தங்களில் சாதனை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இன்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மிகப்பெரிய வருமானத்தை ஈட்டும் நிறுவனமாக மாறியிருக்கிறது. அதற்குக் காரணம், அதிக விலைக்கு எரிபொருள் விற்கப்படுவதும் ஒன்று.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கே இந்த வருமானம் என்றால், லங்கா ஐ.ஓ.சி.யின் வருமானம் இன்னும் அதிகமாக இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

பொருளாதார நெருக்கடியின் போது கூட லங்கா ஐ.ஓ.சி. வரையறுக்கப்பட்ட அளவிலேயே செயற்பட்டது. லங்கா ஐ.ஓ.சி. யினால் கூடுதல் எரிபொருள் விநியோகத்தை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் அது தனது எல்லையைத் தாண்டி விநியோகத்தை விரிவாக்கவில்லை.

அது போலவே, எரிபொருள் விலையை குறைத்து விற்கவும், அரசாங்கம் அனுமதிக்கவில்லை. ஆனால், சீனாவின் சினோபெக் நிறுவனத்துக்கு அவ்வாறான எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை.

செப்டெம்பர் 20ஆம் திகதி சினோபெக் நிறுவனம் எரிபொருள் விற்பனையை ஆரம்பிக்கும் என அறிவித்த அமைச்சரவைப் பேச்சாளரான பந்துல குணவர்தன, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு குறைவாகவும், எரிபொருளை விற்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

200 எரிபொருள் விற்பனை நிலையங்களைக் கொண்டிருக்கும் சினோபெக் குறைந்த விலையில் எரிபொருளை விற்கத் தொடங்கும் போது, வாகனங்கள் அவற்றை முற்றுகையிடும்.

அந்தக் கட்டத்தில், லங்கா ஐ.ஓ.சி.நிறுவனமும் போட்டிக்கு விலைக்குறைப்பை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படும். ஏனென்றால் இப்போது உள்நாட்டு எரி பொருள் சந்தை, இந்தியா– சீனாவுக்கு இடையிலான போட்டியாக மாற்றப்படுகிறது.

இந்தப் போட்டி ஆரோக்கியமானதாக இருக்குமா என்ற கேள்வி உள்ளது.

ஏனென்றால், இந்திய, சீன நிறுவனங்கள் போட்டி போட்டு, விலை குறைப்பை மேற்கொண்டால், பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் விலைக்குறைப்பை மேற்கொள்ள வேண்டும். அந்த இடத்தில் எரிபொருள் விலையை கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திடம் இல்லாமல் போய் விடும்.

அவ்வாறு விலைக்குறைப்பை மேற்கொள்ளாது போனால், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் சோபையிழக்கும். அது அரச நிறுவனத்தின் வருமானத்தை பாதிக்கும். போட்டி போட்டாலும் சரி போட்டி போடாவிட்டாலும் சரி, இழப்பு அரசாங்கத்துக்குத் தான். அப்படியானால் எதற்காக எரிபொருள் சந்தையில் வெளிநாட்டு நிறுவனங்களை அரசாங்கம் அனுமதித்தது? இது பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் எடுக்கப்பட்ட ஒரு முடிவு.

பொருளாதார நெருக்கடியின் போது, நாடு ஒரு கட்டத்தில் முற்றாக முடங்கியது. அதற்குக் காரணம், எரிபொருள் விநியோகம் முடங்கியது தான்.

எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்திடம் டொலர் இருக்கவில்லை. எண்ணெய் கப்பல்கள், கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் வாரக்கணக்கில் கூட காத்திருந்தன. ஆனால், நாடு இருளில் மூழ்கிக் கிடந்தது. டொலர் நெருக்கடியினால் ஒட்டுமொத்த நாடே செயலிழந்தது.

எரிபொருள் இறக்குமதிக்காக டொலரைப் புரட்ட முடியாத நிலை ஏற்பட்டதால், அதற்கு மாற்று உபாயமாகவே வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கதவு திறக்கப்பட்டது.

வெளிநாட்டு நிறுவனங்கள் எரிபொருள்

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**




சந்தையில் கால் வைக்கும் போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏகபோகம் பாதிக்கப்படும். சினோபெக் விநியோகத்தை தொடங்கும் வரை, எரிபொருள் சந்தையில் 80 வீத உரிமையை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே கொண்டிருந்தது. இதனால் ஏற்படக் கூடிய பாதிப்பை, – இழப்பை அரசாங்கம் எவ்வாறு ஈடு செய்யும்?

அதற்கும் ஒரு வழி இருக்கிறது. சீன நிறுவனம், 100 மில்லியன் டொலர் முதலீட்டை கொண்டு வந்திருக்கிறது. அடுத்து தொடர் விநியோகத்தில் ஈடுபடும் போது, உள்நாட்டில் இருந்து, எரிபொருள் கொள்வனவுக்காக முன்கூட்டியே டொலரை திரட்ட வேண்டியதில்லை.

பிற்கொடுப்பனவாகவே டொலரை மாற்றிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு மத்திய வங்கி அல்லது வர்த்தக வங்கிகளின் ஊடாக டொலரை மாற்றி கொண்டு செல்லும் போது நாணய மாற்று வீத வருமானத்தை அரசாங்கம் பெற்றுக் கொள்ளும்.

அதேவேளை, அரசாங்கம் எரிபொருள் விலைகளை அதிகரித்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை சுமக்கும் நிலை வராது. சீனாவோ, இந்தியாவோ சர்வதேச சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப விலைகளை தீர்மானிக்கும். அந்தப் போட்டியின் சாதகங்களை(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஜனாதிபதியின் அரசியலும் 13வது திருத்தத்திற்கான பாராளுமன்ற விவாதமும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இலங்கைத்தீவின் அரசியல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் சாத்தியப்பாட்டை அடைய முயல்வதாகவே தெரிகிறது. அதமை நோக்கி அயல் நாடான இந்தியாவும் நடப்பதாகவே விளங்கிக ˙கொள்ளப்படுகிறது. இந்திய–இலங்கை கூட்டு முயற்சியில் மீளவும் ஒரு தீர்வுக்கான நடவடிக்கை சாத்தியப்படப் போவதாகவே தெரிகிறது.


அத்தகைய அரைகுறை தீர்வு முயற்சியை தமிழ் தரப்பு எதிர் கொள்வதற்கு திராணியற்றுள்ளது. கடந்த காலங்களில் எழுந்த அனைத்து முயற்சிகளையும் தமிழ் தரப்பாக கட்சிகளும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களும் எதிர் கொண்டிருந்தன தற்போது கட்சிகள் பெருமளவுக்கு ஜனாதிபதி பாராளுமன்றத்தில் முன் வைக்கும் தீர்வுக்கு உடன்படும் நிலைக்குள்ளேயே காணப்படுகின்றனர். அதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன. ஒரு சில கட்சிகள் எதிர்த்தாலும் அவை அதனை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் திறனற்றவையாக உள்ளன, எல்லாவற்றுக்கும் மேலாக பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறப்படுவதில் ஏன் கவனம் கொள்ளப்படுகிறது என்பதே தற்போதுள்ள பிரதான கேள்வியாகும். இதனை விளங்கிக் கொள்ள இக்கட்டுரை முயலுகிறது.

முதலாவது பதின்மூன்றாவது திருத்தமானது இலங்கை–இந்திய உடன்படிக்கையில் எட்டப்பட்டு இலங்கை அரசியலமைப்பில் (42.இலக்க) சட்ட மூலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு 35 வருடமாக அமுலாக்கத்திற்கு உட்பட்ட வரைபொன்றினை மீளவும் பாராளுமன்றத்தில் விவாதிப்பது வாக்கெடுப்புக்கு விடுவதென்பது பாராளுமன்றத்தின் இறைமையை எளிதாக்கும் செயலாகும். ஏற்கனவே வடக்கு கிழக்கு தற்காலிக இணைப்பு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் மீறப்பட்டுள்ளது. அதனைக் கூட நீதிமன்றத் தீர்ப்பென நியாயப்படுத்திக் கொண்டாலும் நல்லிணக்கத்திற்கு அபாயமானதாகவே உணரப்படுகிறது.

ஆனால் இலங்கை ஆட்சியாளர்களுக்கு அரசியலமைப்பை மீறுவதென்பது புதிய விடயமல்ல, பாராளுமன்ற முறைமையையோ சட்டத்தின் வலிமையையோ தமது இன ஜனநாயகத்திற்கு பலியிடும் மரபை தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் கொண்டவர்கள். அத்தகைய ஒரு மீறல் மீளவும் நிகழப் போகிறது. அதற்கு தமிழ் தரப்பும் இந்தியாவும் துணைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியா நலன் சார்ந்த நகர்ந்து கொண்டாலும் தமிழ் அரசியல் தலைவர்கள் பலியிடப்படுகிறதாகவே உணரப்படுகிறது. சட்டத்திலுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கே நிர்வாகத்துறையும் நிறைவேற்று நிர்வாகத்துறையுமுண்டு. அவ்வகை சட்டம் மக்களுக்கு பயனுடையது இல்லையா என்பதையும் முழுமையாக அமுலாக்கப்படுகிறதா என்பதையும் கண்காணிப்பதே நீதித்துறையின் பணியாகும். ஆனால் அவை எதுவும் இலங்கையில் சாத்தியமற்றதாகவே விளங்குகிறது. அமுலாக்கத்திலுள்ள ஒரு விடயத்தை முழுமையாக அமுலாக்கம் செய்வதற்கு பாராளுமன்றத்தில் விவாதித்து வாக்கெடுபடுப்பு மேற்கொள்ள முயலும் ஒரே நாடு இலங்கை மட்டுமே.. அதனை தென் இலங்கை .ஆட்சியாளர்களால் மட்டுமே முடியும்.

இரண்டு. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலமுடைய கட்சியாகவும் ஆளும் தரப்பாகவும் பொதுஜனப் பெரமுன விளங்குகிறது. அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் பதின்மூன்றாவது திருத்தத்தினை முழுமையாக அமுலாக்கம் செய்வதற்கு பதிலாக முழுமையாக நீக்கி விட வேண்டும் எனக் கருதுபவர்கள். அதனால் ஏற்படப்



போகும் விவாதம் எத்தகையதாக அமையும் என்பதில் அதிக குழப்பம் கொள்ளத் தேவையில்லை. இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட பதின்முன்றை நீக்கி விட்டு உள்ளூராட்சி அதிகாரங்கள் இனப் பிரச்சினை தீர்வுக்கு போதுமானது என்ற கருத்தை அதிகம் கொண்டவர். தற்போது கூட இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கைக்குள் எட்ட முடியுமென தெரிவித்து வருகினார்.

இதே கருத்தினையே பொதுஜனப் பெரமுன உறுப்பினர்கள் அதிகம் கொண்டுள்ளளார். அது மட்டுமல்ல பொதுஜன பெரமுனாவிலிருந்து பிரிந்து சென்றவர்களும். அதே கருத்தினைக் கொண்டுள்ளனர். அண்மையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்த வேட்பபாளரான டலஸ் அழகப்பெருமாளும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரமற்ற பதின்மூன்றை தமிழருக்கு வழங்க வேண்டும் என அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்,

எனவே இதற்கூடாக ஜனாதிபதி புதின் மூன்றாவது திருத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருதல் என்ற அணியின் நிலையை பயப்படுத்த முயலுகிறாரா என்ற சந்தேகம் எழுகிறது. அல்லது அவ்வாறே பலவீனமான பதின்மூன்றை அமுல்படுத்துவதன் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வை முழுமைப்படுத்தி விட முடியுமென கருகிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

மூன்று, பதின்மூன்றாவது திருத்தம் இந்த நாட்டுக்கு அவசியம் என தனது உரையைப் பாராளுமன்றத்தில் தொடங்கிய ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு எழுந்துள்ள பதில்கள் அபாயமான நிலையையே தோற்றுவித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்சவும், அத்துலிய ரத்தின தேரரும் வெளிப்படுத்திய தகவல்கள் அதிகம் அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

மீண்டும் ஒரு இன வன்முறைக்கு கொண்டு செல்லும் சூழலை ஏற்படுத்துமா என்ற சந்தேகத்தை அவர்களது உரைகள் வெளிப்படுதியுள்ளன. குறிப்பாக வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் பற்றிய கரிசனையை தென் இலங்கைத் தலைவர்கள் எழுப்பியதுடன் வடக்கு கிழக்கிலுள்ள சிறுபான்மையான சிங்கள மக்கள் பற்றியும் தென் இலங்கைத் தலைவர்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர். அவர்களுக்கான தீர்வையும் உரையாடுமாறும் அவர்களை இணைத்துக் கொள்ளூமாறும் தெரிவித்துள்ளனர். இது பதின்மூன்றாவது திருத்தத்திற்கு முன்னாலோ பின்னாலோ செல்ல முடியாது என்பதை கோடிட்டுக் காட்டுவதாகத் தெரிகிறது. இத்தகைய அனுபவம் தென் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அதிக காலமாக உண்டு என்பதை மறந்து விட முடியாது. சமாதானம் பேசுவதிலேயே கடந்த எழுபத்தைந்து வருடங்கள் சென்றுள்ளது, தீர்வு எதுவுமே காட்டப்படவில்லை. எட்டிய தீர்வுகளும் குழப்பப்பட்டுள்ளது.

நான்கு. ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சாரம்சம் முழுமையாக இந்தியாவை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது. அவரது உரையின் தொடக்கமே பதின்மூன்றாவது திருத்தம் நாட்டுக்கு அவசியமானது என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. அவ்வாறே இந்தியாவுடன் மேற் கொள்ளவுள்ள உடன்பாடுகள் சார்ந்தும் அதனால் ஏற்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் சார்ந்தும் உரையாற்றியிருந்தார்.

இந்தியாவுடன் இணைந்து வடக்கு கிழக்கிலும் ஏனைய பிராந்தியங்களிலும் கட்டமைக்கப்படவுள்ள பசுமைத் திட்டங்களையும் முதலீட்டு ஈர்ப்பு முயற்சிகளையும் தனது உரையில் முதன்மைப்படுத்தியிருந்தார். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பற்றியும் அதானி குழுமத்தின் முதலீடுகள் பற்றியும் உரையில் தெரிவித்திருந்தார்.

ஒருவகையில் ஜனாதிபதியின் பதின்மூன்றாவது திருத்த அமுலாக்குவதற்கான நகர்வு இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்புக்கான நகர்வாகவே தென்படுகிறது. அதன் முக்கியத்துவத்தை அதிகம் கோடிகாட்டியதாகவே உரையின் கணிசமான பகுதி அமைந்திருந்தது.

ஐந்து, வடக்கு கிழக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் விடுவிப்புக்கான தகவலும் காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் செயல்பாடும் நிதிப் பிரயோகமும் அதிகம் உரையில் காணப்பட்ட இன்னோர் விடயமாகும். இதன் வாயிலாக ஒரு செய்தியை இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தெரியப்படுத்த முயலுகிறதாகவே தெரிகிறது. அத்தகைய அலுவலகத்தினதும் நிதிப் பங்களிப்பினதும் பிரயோகம் எந்தளவுக்கு பயனற்றதென்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரிந்த விடயம்.

ஆனால் அதனை ஜனாதிபதி தனது உரையின் மூலம் மறைத்துள்ளதுடன் செயல்படுத்தப்படாத விடயங்களை பட்டியலிடுவதன் வாயிலாக அத்தகைய செயல்பாடுகளை கையாள முயன்றுள்ளார் என்பது புலனாகிறது. நல்லிணங்க செய்முறை பற்றிய புதிய திட்டங்களை சமர்ப்பித்த ஜனாதிபதி பயங்கரவாத தடைச் சட்டத்திற்கான புதிய வரைபுகள் சார்ந்தும் விவாதத்தை தொடக்கியுள்ளாராம். தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வை முன் வைக்க வேண்டும் என்ற உரையாடலை பல இடத்தில் சுட்டிக் காட்டுவதாக ஜனாதிபதியின் உரை அமைந்திருந்தது.

ஆறு. கடந்த நாட்களில் ‘ஐலண்ட்’ பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடுவது போல் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வை முன் வைப்பதன் மூலம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளை ஜனாதிபதி தேர்தலில் பெற்றுக் கொள்ள முயலுவதாக கருதிக் கொள்ள முடியும். ஆனால் ஜனாதிபதி தேர்தலை விட பெரும்பான்மைத் தேசியத்தின் இருப்பினை அதிகம் பாதுகாக்க எத்தனிக்கும் தலைவராக கடந்த காலத்தில் விளங்கியவர் என்பது கவனத்திற்கு உரியதாகும்.

இதன் மூலம் சிங்கள பெரும்பான்மை தேசியத்தின் பாதுகாவலனாக அடையாளப்படுத்துவதுடன் அதன் சார்பில் எழுந்துள்ள சவாலை வெற்றி கொள்ள முயலும் அரசியல் தலைவராக ஜனாதிபதி விளங்குவார். இலங்கைத்தீவின் அரசியலும் பொருளாதாரமும் ஒன்றாக பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கருதும் ஜனாதிபதி இந்தியாவின் பலத்தை ஒத்துழைப்பாக மாற்ற முயலுகிறதாகவே தெரிகிறது. சீனா பொறுத்து இந்தியாவின் நகர்வுகளே ஜனாதிபதியின் அரசியலும் இலங்கைத்தீவின் அரசியலுமாகும். அதன் உண்மைத் தன்மையைக் காட்டிலும் அதி தீவிரம் பொருந்தியதாக காட்டப்படுகிறது.


எனவே பதின்மூன்றாவது சீர்திருத்த அமுலாக்கத்திற்கான பாராளுமன்ற விவாதம் அதன் அடிப்படையை .மூக்க செய்யும் செய்முறையாக மாறுவதாகவே தெரிகிறது. அதற்கான உரைகளும் எதிர்ப்புகளும் ஆரம்பமாகியுள்ளன. தென் இலங்கைப் பாராளுமன்றம் தமிழருக்கான தீர்வு முயற்சிகள் பலவற்றை உரையாடியுள்ளது. ஆனால் ஒரு போதும் முழுமையான தீர்வை உத்தரவாதப்படுத்தவில்லை.

தற்போது மீளவும் அத்தகைய நகர்வை ஆரம்பித்துள்ளது. இதன் சாரமும் கடந்த காலத்தைப் போன்று நகர வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. மீண்டும் ஓர் துயரத்திற்குள் ஈழத்தமிழரது அரசியல் பக்கம் கட்டமைக்கப்படுகிறது. இந்தியாவின் அடுத்த பிரதமரென கருதப்படுபவரும் தற்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான அமித்ஷா இலங்கையில் நிகழ்ந்தது இனப்படுகொலை என தெரிவித்துள்ளார். இதே கருத்தினை 1983களில் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியும் தெரிவித்திருந்தார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதற்கு பின்னர் ஏற்பட்ட மாற்றங்களை தென் இலங்கை எவ்வாறு கையாண்டது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் ஜனாதிபதியின் இந்திய விஜயம் இந்தியத் தரப்புக்கு திருப்தியைக் கொடுக்கவில்லை என்பதை அமித்ஷாவின் டுவிட்டர் பதிவு உறுதிப்படுத்தியுள்ளது. (வாசகர்களே, இது பற்றிய புரிதலை அடுத்தவாரம் உரையாடுவது பொருத்த மானதாக அமையும்)

# அமிர்தலிங்கம் என்ற அரசியல் சொத்து!

**26 ஆகஸ்ட் 2023 அமுதரின் 96வது பிறந்த தினம். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**



**மாலி**

இலங்கையில் வாழ்கின்ற இரண்டு தேசிய இனங்களுமே ஒரே நதிமூலத்தையே கொண்டிருந்தாலும் அதாவது, இலங்கையின் ஆதி குடிகளான இயக்கர், நாகர், வேடர் என்ற இவர்களைத் தவிர்ந்த, சிங்களவர், தமிழர் என்ற இரு இனத்தவருமே இந்தியாவிலிருந்தே குடியேறியிருந்தபோதிலும், இலங்கையின் சரித்திரம் சிங்கள மக்களின் சரித்திரமாகவே எழுதப்பட்டது. மகாவம்சம்தான் இலங்கையின் 'பைபிள்'போலானது. சோல்பரி அரசியலமைப்பில் பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த வேளையில்தான் இலங்கையில் எழுதப்படாதுபோன இலங்கைத் தமிழர்களின் சரித்திரம்பற்றிய ஒரு விழிப்பு எழத் தொடங்கியது. அத்தோடு, தங்களுடைய வாழ்வுக் காலத்தில் தமிழ் இனத்தின் மொழி, பிரதேசம், சமூகம், கலாசாரம். கல்வி, பொருளாதாரம் சார்ந்த ஓர் அரசியல் விழிப்புணர்வும் அப்போதுதான் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டது ஏற்படுத்தப்பட்டது. அது, தங்களின் உரிமைக்கான ஒரு விடுதலைப் போராட்டமாகவும் வரலாற்றில் ஒரு வடிவத்தை எழுதத் தொடங்கியது.

தங்களுடைய அரசியல் உரிமைகளுக்காக சாத்வீக வழியிலான சமஷ்டி கோரிக்கையுடன் ஆரம்பித்த இந்த விடுதலைப் போராட்டம், ஈற்றில் தங்களுக்கென்று ஒரு தனிநாடு கோரிக்கையுடன் ஆயுத போராட்டமாக மாறி, உலக அரங்கிலும் அறியப்பட்டது. ஆக, சுதந்திரத்துக்குப் பின்னரான இந்த விடுதலைப் பேராட்ட வரலாற்றுக் காலத்தில், இலங்கைத் தமிழ் இனத்துக்கு எக் காலத்துக்குமான ஓர் அரசியல் சொத்தாக தன்னை அளித்தவர் அமிர்தலிங்கம்.

என்னுடைய பத்திரிகை வாழ்வு - பத்திரிகை அனுபவம் ஐம்பது ஆண்டுகளை அண்மித்துவிட்டது. இந்த வாழ்வில், அமிர்தலிங்கம் என்ற இந்த மனிதரை நான் தெரிந்துகொண்டதை மேலானதாக சொல்வேன். அவரைத் தெரிந்துகொண்டமை என்று சொல்வது, அவருடனான பழக்கத்தை நான் சொல்லவில்லை. அவரிடம் பொதிந்திருந்த எத்தனையோ வகையான உன்னத மான ஆற்றல்களையும் பண்புகளையும் அவற்றின் தனித்துவத்தையும் நான் உன்னிப்பாக தெரிந்துகொண்டேன்.

இலங்கைத் தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன்தான் தொடங்குகிறது. இதை, அமிர்தலிங்கத்துடன் தொடங்கியது என்றும் சொல்லாம். முப்பது வருடங்கள் சாத்வீகவழியில் தீரங்களையும் தியாகங்களையும் நிறைத்த இப் போராட்டம், பின்னர் தீவிரவாத போக்கில் ஆயுத போராட்டமாக மாற்றம்பெற்றது. எஸ். ஜே. வி. செல்வநாயகமோ அல்லது ஜீ. ஜீ. பொன்னம்பலமோ சந்தித்திருக்காத மிகச் சிக்கலான ஒரு மாறுதல் காலத்து தலைவராக அமிர்தலிங்கம் விளங்கினார். அதுவும், முன்னெப்போதும் இல்லாதவிதத்தில் அக்காலத்தில் பராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவுமிருந்தார். அத்துடன், நாட்டைப் பிரிக்கும் தனிநாடு கோரிக்கையுடன் அவர் அப்போது பாராளுமன்றம் சென்றிருந்தார்.

இப்படி, ஓர் அசுர நெருக்குதலில் மார்தட்டி, சாதுரியத்துடன் நிமிர்ந்து நின்ற ஒரு பெரும் தலைவர் அமிர்தலிங்கம். தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதனையொத்த இயக்கங்ளையும் தடைசெய்வதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது, குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்ட எதிரியைப் போல, அத்தனை சட்டவாதிகளினதும் சரமாரியான கணைகளை எதிர்த்து, தன்னையும் அவர்களையும் (புலிகளையும்) காட்டிக்கொடாது, கத்திமேல் நடந்த தான அந்த பேச்சு, அந்த நிலைமாறுகால தலைவனை புடமிட்டு காண்பித்தது. இப்போதும் சொல்வேன், அமிர்தலிங்கத்தின் இந்த உரையைத் தெரிந்த எவராலும், அவருக்கு எதிராக துப்பாக்கி நீட்ட முடியாது.

துணிச்சலும், தீரமும், ஆளுமைகளும் மிக்க அரசியல்வாதியான அமிர்தலிங்கம், இலங்கையின் ஓர் உன்னத அரசியல் கனவானாக பரிணாமமானதை இக் காலப்பகுதியில் ஒரு பாராளுமன்ற நிருபராக அருகிருந்து நான் அவதானித்தேன் கண்டேன். அவரைநான் தெரிந்துகொண்டதாக சொல்வது இதைத்தான். பொதுவாக, எல்லா பாராளுமன்ற நிருபர்களுமே இதனைத் தங்களில் உணர்ந்தார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ் மக்களின் அரசியலுக்கு அவர் பயன்படுத்தும் சாதுரியத்தில் அரசாங்கம் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொணர்ந்தது. ஆனால், இலங்கையின் மிகச் சிறந்த எதிர்க் கட்சிகட்சித் தலைவர் ஒருவராகவே அனைத்து கட்சிகளும், பல்கலைக்கழக மாணவர்கள், பௌத்த பிக்குகள் உள்பட்ட பெரும்பாலான சிங்கள மக்களும் அவரை மதித்தார்கள். உலக அரசியலில் சரித்திரமாகும் சிறிமாவோ பண்டாரநாயக்க, தன்னுடைய குடியுரிமையையும் இழந்து, அந்த பாராளுமன்ற சபையைவிட்டு வெளியேறுகையில் சொன்ன கடைசி வார்த்தை, 'கௌரவ எதிர்க்கட்சித் தலைவரையும் கௌரவ நல்லூர் உறுப்பினரையும் (மு. சிவசிதம்பரம்) என் உயிருள்ளவரை மறக்கமாட்டேன்', அவர் வார்த்தைகளால் மாத்திரம் இதைச் சொல்லவில்லை, அவர் கண்களில் அப்போது கண்ணீர் சொட்டியது.

ஐந்து நிமிஷமோ அல்லது ஐந்து மணித்தியாலங்களோ, தமிழோ அல்லது ஆங்கிலமோ, சந்தர்ப்பத்துக்கும் சபைக்கும் ஏற்ப பேசவல்ல மகா சமர்த்தர் அமிர்தலிங்கம். இலங்கையின் அரசியலமைப்பு 1978இல் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாற்றப்பட்டபோது, அந்த சட்டமூலம் மீதான விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றவில்லை. ஆனால், ஏன் தாங்கள் அதில் பங்குபற்றவில்லை என்பதை விளக்கி, அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் ஐந்து மணித்தியாலங்கள் உரையாற்றினார். அது, அப்போது அந்த பாராளுமன்றத்தில் பேசப்பட்ட மிக நீண்ட உரையாகவிருந்தது. அமிர்தலிங்கத்தையடுத்து பிரேமதாச பேசினார். அவர் ஐந்தரை மணித்தியாலங்கள் பேசினார். அமிர்தலிங்கத்தின் பேச்சு சாதனையாகிவிடக்கூடாது என்பதற்காகவே பேசினார்.

ஆனால், அமிர்தலிங்கம் பேசி அமர்ந்தபோது, அப்போது சபாநாயகராகவிருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அக்கிராசனத்தில் இருந்தபடி, குறிப்பொன்றை பாராளுமன்ற செயலாளர்மூலம் அர்தலிங்கத்திடம் சேர்ப்பித்தார். அதனைப் படித்த அமிர்தலிங்கம், சபாநாயகரைப் பார்த்து தலையை அசைத்து, ஒரு புன்முறுவல் செய்தார்.

'இப்படி ஓர் அருமைவாய்ந்த உரைக்கு தலைமை தாங்க கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்' என்று சபாநாயகரின் அந்தக் குறிப்பு இருந்தது.

1977 பொதுத் தேர்தலில் இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்கவினுடைய ஆட்சி மாறி, ஜே. ஆர். ஜயவர்த்தன புதிய ஆட்சியை அமைத்தார். அதுபோலவே இந்தியாவில் இந்திரா காந்தியினுடைய ஆட்சி மாறி, மொரார்ஜி தேசாய் பிரதமரானார். இந்த ஆட்சி மாற்றத்தில் ஜே. ஆர். ஜயவர்த்தனவும் மொரார்ஜி தேசாயும் புதிய நண்பர்களானார்கள். இலங்கையில் தமிழர் அரசியல் நடவடிக்கைகளில் இளைஞர்களின் தீவிரவாதமும் தீவிரமாகிக்கொண்டிருந் தது. அரசுக்கு தலையிடியாகும் இந்த விவகாரத்தைத் தணிக்கும் ஒரு முயற்சியாக, பிரதமர் ஜயவர்த்தனவின் அழைப்பில் மொரார்ஜி தேசாய் இலங்கை வந்தார். அவ்வேளையில் அவருடன் பேச அமிர்தலிங்கத்தின் அலுவலகம் பலவாறாக முயன்றும் முடியவில்லை. எனினும், பாராளுமன்றத்தில் மொரார்ஜி தேசாய்க்கான வரவேற்பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் அமிர்தலிங்கத்துக்கு ஐந்து நிமிடங்கள் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

பேச்சு முடிந்த பின்னர், மொரார்ஜி தேசாய் தரப்பிலிருந்து வந்த அழைப்பில், அமிர்தலிங்கம் சில சுற்றுக்கள் மோரார்ஜி தேசாயுடன் பேசினார். டெல்லி திரும்புமுன்னர், 'இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் பிரச்னை, அவர்களுக்கு கௌரவமான விதத்தில் தீர்க்கப்படவேண்டும்' என்று, பத்திரிகையாளர்களிடம் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டார். விமான நிலைய வழியனுப்பு வைபவத்தில், இந்தியா வர அமிர்தலிங்கத்துக்கு ஒரு விசேட அழைப்பையும் மொரார்ஜி தேசாய் விடுத்தார்.

பாராளுமன்ற வரவேற்பில், அந்த ஐந்து நிமிட மந்திர உரையின் மாயம் இது.

இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் தீர்வில் இந்தியாவின் முக்கியத்துவத்தையும் தேவையையும் சரியாக அதன் பரிமாணங்களோடு உணர்ந்தவர் அமிர்தலிங்கம். அதில் இந்திய தலைவர்களுடன் அவர் பேணிய உறவு ஒருபுறமிருக்க, இந்திய தலைவர்கள் இவரிடம் காண்பித்த மதிப்பும் அபிமானமும் கருத்தில் கொள்ள வேண்டியது. அதிலும், இந்திரா காந்தி ஓர் அரசியல் கனவானாகவே அவரை மதித்தார். அந்த மதிப்பில் அமிர்தலிங்கத்துக்கு இந்தியாவிலும் உலக நாடுகளிலும் அவசியமான ஆதரவுக்கு இந்திரா காந்தி பெரிதும் அநுசரணையாகவிருந்தார்.

டெல்லி ராஷ்டிரபதி பவனில், சுதந்திரதின இரவு விருந்துக்கு (1983) அமிர்தலிங்கத்தை அழைத்த பிரதமர் இந்திரா காந்தி, அவரை சில நிமிடங்கள் தாமதித்து வரச்சொன்னார். விருந்தினர்களுடன் நிறைந்திருந்த மண்டபத்தில் அமிர்தலிங்கம் பிரவேசித்தபோது, இந்திரா காந்தி எழுந்துவந்து அவரை வரவேற்றார். எல்லோர் கவனமும் அமிர்தலிங்கம்மீது திரும்பியது.

தேர்தலில் தோல்வியுற்ற கருணாநிதி, 1981 மதுரை ஐந்தாவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டை புறக்கணித்தார். கருணாநிதிக்கு ஆதரவானவர் என்ற எண்ணத்திலோ என்னவோ, மாநாட்டு தொடக்கநாளில் சம்பந்த மேயில்லாமல், அமிர்தலிங்கம்மீது சற்று காட்டமாகவே முதலமைச்சர் எம். ஜி. ஆர். பேசியமை, ஆறு தினங்களும் மாநாட்டு நிகழ்வுகளுடன் இணைந்த ஒரு பேசுபொருளாகவே தமிழ்நாடு முழுவதும் இருந்தது. ஏழாம் நாள் இறுதிநாள் நிகழ்வுகளில் பிரதமர் இந்திரா காந்தி கலந்துகொண்டார்.

அன்று பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்ட இந்திரா காந்தி, மேடைகளில் அருகிலிருந்த எம். ஜி. ஆர். பக்கம் திரும்பவில்லை. மாலை, குதிரைப்பந்தய திடலில் பிரமாண்டமான முடிவு வைபவம். அங்கும் மேடையில் அருகருகேதான் இருந்தார்கள். அமிர்தலிங்கம் அங்கு வரவும் இந்திரா காண்பித்த வாஞ்சையில் திகைத்துப்போன எம். ஜி. ஆர்., அமிர்தலிங்கத்தை ஆரத் தழுவினார்.

## மந்திர உரை செய்த மாயம்

ஆக, இப்படி இந்தியாவுடன் - இந்திராவுடன் பேணிய - ஏற்படுத்திய நம்பிக்கையுடனான நட்பில் அமிர்தலிங்கம் ஈட்டிய சொத்து ஒன்றுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம். இதனை இலங்கைத் தமிழ் மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வாக எவருமே கொள்ளவில்லை - சொல்லவில்லை. ஆனால் அதே வேளை, இது மிக எளிதாக ஏற்பட்டுவிட்ட ஒன்றும் அல்ல. தெற்கு ஆசியாவின் கிழநரியான ஜே. ஆர்., 'இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னர், நான் தொடர்ந்து பதவியிலிருக்க எனக்கு பாதுகாப்பாக இருப்பீர்களா' என்று இந்தியாவைக் கேட்டுத்தான் ஒப்பமிட்டார்.

ஒப்பந்தத்தைப்பற்றிய வாத பிரதிவாதங்களுக்குள் இப்போது செல்லவில்லை. ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினம் அமிர்தலிங்கத்திடம் லண்டனிலிருந்து தொலைபேசியில் இந்திய அமைதிப்படை பற்றி கேட்டபோது. எந்த ஒரு நாட்டின் இராணுவமும் எக்காரணத்துக்காகவும் இன்னொரு நாட்டுக்குள் செல்வது பெரிதும் வரவேற்புக்குரியதல்ல. ஆனால், எங்களுடைய நிலைமையில் இந்திய இராணுவம் உடனடியாக வராவிட்டால், இங்கு பெரும் 'மசக்கர்' நடந்துவிடும் என்று சொன்னார்.

அமிர்தலிங்கத்துக்கும் இந்தியாவுக்குமிடையில் சில இரகசிய முன்னெடுப்புகள் நடைபெறுவதாகத்தான் அமிர்தலிங்கம் கொலைசெய்யப்பட்டார். அப்படியொரு முன்னெடுப்பு நிகழ்ந்திருந்தால், அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைவிட கூடுதலானதாக இருந்திருக்குமா அல்லது குறைந்ததாக இருந்திருக்குமா?

எப்படியிருந்தாலும், அது இப்போது முடிந்த கதை. அமிர்தலிங்கத்தின் வாழ்வும் அந்தக் கதையோடு முடிந்தது. ஆனால், அமிர்தலிங்கம் ஈழத் தமிழர்களின் அரசியல் சொத்து. அது, மறைக்கப்பட்ட ஒரு சொத்தாக இருப்பதுதான் நம்முடைய இனத்தின் அவலம்.

முப்பது ஆண்டுகள் சாத்வீக போராட்டமும் முப்பது ஆண்டுகள் ஆயுத போராட்டமுமாக இலங்கையில் தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் ஓய்ந்தபோது, மற்றொரு பத்தாண்டுகளை அதற்குப் பின்னர் தமிழர் அரசியலில் தலைப்பட்ட அரசியல்வாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர். நம்மிடமிருந்த - இருக்கின்ற சொத்துக்களை இவர்கள் தெரிந்திருக்கிறார்களோ என்னவோ ஆனால், நம்முடைய மக்களுக்கு ஓரளவுக்கு பயனாகவல்லதாக நம்மிடம் இப்போது இருப்பது அமிர்தலிங்கம் தேடிவைத்த இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான். அதனை நம்முடைய மக்களுக்கு பயனாக்குவதுதான் இந்த அரசியல் வாதிகள் இப்போது அவசியமாக செய்யவேண்டியதும் செய்யக்கூடியது மாகும். •

# தமிழரை பிளவுபடுத்தும் சிங்களப் பேரினவாதம் துணை போகும் மறவன்புலோ சச்சி

குருந்தூர்மலையில் தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு இடத்தில் பௌத்த விகாரையை அமைத்து விட்டு, அதனைப் பாதுகாப்பதற்கு இப்போது, பல்வேறு வழிகளில் முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறது சிங்கள பௌத்த பேரினவாதம்.

நீதிமன்ற அனுமதியுடன் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்வதற்கு, கடந்த மாதம் ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, இனவாதிகள், பௌத்த பிக்குகளுடன் பொலிஸாரும் இணைந்து அதனைக் குழப்பியிருந்தனர்.

இந்த நிலையில் 18 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமை பொங்கல் வழிபாடுகளை அமைதியான முறையில் மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் மீண்டும் அனுமதி அளித்திருந்தது.

அந்தப் பொங்கல் வழிபாட்டினால், இன முறுகல் ஏற்படும் என்று கூறி, அதனை தடுப்பதற்கு கட்டளை பிறப்பிக்குமாறு பொலிஸ் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

ஒரு தரப்பினரின் எதிர்ப்பினால் இன்னொரு தரப்பினரின் வழிபாட்டு உரிமைக்கு தடைவிதிக்க முடியாது என்று நீதிமன்றம் தனது கட்டளையில் கூறியிருந்தது.

இந்தப் பொங்கலைத் தடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்றவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

அதேவேளை தமிழர்கள் பொங்கல் வைப்பதை தடுக்க ஒன்றிணைந்து வருமாறு வெலிஓயா சிங்களக் குடியேற்றப் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. பௌத்தர்களை குருந்தூர்மலையில் ஒன்று கூடுமாறு உதய கம்மன்பில போன்றவர்களும் அறிவித்திருந்தனர்.

இதற்கமைய, தமிழ் மக்கள் பொங்கல் வைப்பதற்காக குருந்தூர்மலை செல்வதற்கு முன்னரே, பல பேருந்துகளில், நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள், கொண்டு வரப்பட்டு குருந்தூர்மலையில் இறக்கி விடப்பட்டனர். அவர்கள் அடாத்தாக கட்டப்பட்ட குருந்தி விகாரையில் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இதனால், பொங்கல் நிகழ்வில் குழப்பம் ஏற்படலாம் என்ற அச்சமும் ஏற்பட்டிருந்தது. அதேவேளை பாதுகாப்புக்காக பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் வழிகாட்டுதல்கள், நிபந்தனைகளுக்கு அமைய அமைதியான முறையில் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. எவ்வாறாயினும் குறித்த இடத்தில் பதற்றத்தை தூண்டி விட்டு, பொங்கலை நிறுத்துவதற்கு சிங்கள பௌத்த பேரினவாதிகள் கடைசிவரை முயற்சிகளை முன்னெடுத்திருந்தனர்.

தமிழர்களால் குருந்தூர்மலை ஐயனாருக்கு பொங்கலிட்டு வழிபடும் நடைமுறை பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. வீம்புக்கு இந்தப் பொங்கல் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

அதேவேளை குருந்தூர்மலையில் புராதன விகாரை இருந்ததாக பேரினவாதிகளால் கூறப்படுகின்ற போதும், அங்கு மிகச் சமீபகாலம் வரை எந்த பௌத்த வழிபாடுகளும் இடம் பெற்றதில்லை. அண்மையில் பௌத்தமயமாக்கல் தீவிரமடைந்த பின்னர் தான், அங்கிருந்த ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தின் சூலம் பிடுங்கியெறியப்பட்டு, தொல்பொருள் அகழ்வு முன்னெடுப்பதாக கூறி, விகாரை கட்டும் பணி முன்னெடுக்கப்பட்டது.

நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தி விகாரையை அமைத்து விட்டு, இப்போது அங்கு பௌத்த வழிபாடுகள்



மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்கள் பொங்கலிடுவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்த நாளில், எதற்காக சிங்கள மக்கள் அங்கு திரண்டு வர வேண்டும்?

அது பௌர்ணமி நாளுமல்ல, பௌத்த வழிபாட்டுக்குரிய வேறு புனித நாளும் அல்ல. அவ்வாறிருக்க, பெருமளவில் பௌத்தர்களை குவித்து, இன முரண்பாட்டை ஏற்படுத்த முனைந்தது யார்?

தமிழர்களின் பொங்கலைத் தடுக்க முற்பட்டது யார்? இந்தக் கேள்விகள் ஒரு புறத்தில் இருக்க, பொங்கல் வழிபாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு முதல்நாளான, கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நாகவிகாரையில் ஒரு இரகசியக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

அதில் யாழ்ப்பாணம் நாக விகாரையில் விகாராதிபதி, தையிட்டி, நாவற்குழி, குருந்தூர்மலை ஆகிய இடங்களில் அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரைகளின் விகாராதிபதிகளும், சிவசேனை அமைப்பின் அமைப்பாளர் மறவன்புலவு சச்சிதானந்தன் உள்ளிட்ட இந்து சமய அமைப்புகள் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் சிலரும், அந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு மணி நேரம் நடந்த அந்தக் கூட்டத்தின் முடிவில், குருந்தூர்மலையில் ஒரு சிவன் ஆலயத்தை அமைக்க குருந்தி விகாரையின் விகாராதிபதி யோசனையை முன்மொழிந்தார் என்றும், அதனை ஏனைய விகாராதிபதிகளும் ஏற்றுக் கொண்டனர் என்றும் தகவல் வெளியிட்டிருக்கிறார் மறவன்புலவு சச்சிதானந்தன்.

பௌத்தர்களே சிவன் கோவிலை கட்டவுள்ளனர் என்றும், கட்டும் இடம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மலையில் கட்டுவதானால் சிறிய கோவிலைத் தான் கட்டமுடியும் என்றும், கீழே கட்டுவதாயின், பெரிதாக கட்டலாம் என விகாராதிபதி கூறியதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தன் குறிப்பிட்டிருக்கிறார். இதனை தமிழர்கள் சமரச முயற்சியாக நோக்குவதா அல்லது தந்திரமாக நோக்குவதா?

ஏனென்றால், குருந்தூர்மலையில் உள்ள ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டே அங்கு விகாரை கட்டப்பட்டிருக்கிறது. அங்கிருந்து சூலத்தைப் பிடுங்கியெறிந்து விட்டு விகாரையை அமைத்தவர்கள், கடந்த மாதம் கூட பொங்கல் வழிபாடுகளை தடுத்தவர்கள், குருந்தி மலையில் தமிழர்களின் வழிபாட்டு உரிமையை மறுத்தவர்கள், திடீரென சிவன் கோவிலை அமைக்கப் போவதாக கூறுவதை எப்படி நம்பி விட முடியும்? இதன் உள்நோக்கம் ஆராயப்பட வேண்டியது. யாழ்ப்பாணத்தில் சர்ச்சைக்குரிய வகையில் அமைக்கப்பட்ட நாவற்குழி, தையிட்டி விகாரைகளின் விகாராதிபதிகளும் இந்த கூட்டத்தில் பங்கேற்றிருக்கின்றனர்.

அடாத்தாக தமிழர் நிலங்களில் அமைக்கப்பட்ட விகாரைகள் நீடித்திருக்க வேண்டுமாயின், அவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமாயின், தமிழர்களின் தயவு முக்கியம் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கலாம்.

விகாரைகளுக்கு அருகில் சிவன் கோவிலை அமைத்துக் கொடுத்தால், விகாரைகள் பாதுகாப்பாக இருக்கும்



என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

தையிட்டி விகாரையை தமிழ் பௌத்தர்களிடமே கொடுத்து விடுகிறோம். அவர்களே நிர்வகிக்கட்டும் என்று பொகவந்தலாவ ராகுல தேரர் சில மாதங்களுக்கு முன்னர் கூறியது நினைவிருக்கலாம். அது தமிழர்களின் காணியில் அடாத் தாக அமைக்கப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரையை, பாதுகாப்பதற்கான ஒரு வழி.

அதுபோலத் தான், தமிழர் நிலங்களில், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைக்கப்பட்ட விகாரைகளை நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்கான சூழ்ச்சி தான், குருந்தூர்மலையில் சிவன் கோவில் அமைத்து தருகிறோம் என்ற வாக்குறுதி.


இந்த வாக்குறுதியின் ஊடாக தமிழர் தரப்பை இரண்டுபடச் செய்திருக்கிறது சிங்கள பௌத்த பேரினவாதம். குருந்தூர்மலையில் சிவன்கோவில் அமைத்தால் போதும் தானே என்று திருப்திப்படக் கூடிய சிவசேனை போன்ற தரப்புகள் ஒரு பக்கம் இருக்கிறது.

சிவன் கோவில் அமைப்பது தான் குருந்தூர் மலையில் உள்ள பிரச்சினை அல்ல. இது தமிழ்ப் பகுதிகளை பௌத்த மயமாக்கும் திட்டத்துக்கு எதிரான போராட்டம்.

குருந்தூர்மலை, நீராவியடி, கன்னியா, தையிட்டி, நாவற்குழி என்று தமிழர் பிரதேசம் என்றும் விகாரைகள் அமைக்கப்படுவதற்கு எதிரான போராட்டம் இது.

பௌத்தமயமாக்கலை எதிர்க்கின்ற போராட்டத்தை ஒரு சிவன் கோவிலுக்காக சமரசம் செய்து கொள்ள முடியாது. அவ்வாறானவர்கள் இன்னொரு பக்கம் நிற்கிறார்கள்.

மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றவர்கள், பௌத்த ஆக்கிரமிப்பை வலுவாக எதிர்ப்பவர்களில்லை. அவர்களைக் கொண்டு பௌத்த பிக்குகள் சிவன் கோவில் கட்டித் தருகிறோம் என, தமிழர்களை இரண்டு படுத்தியிருக்கிறார்கள்.




ஆனால், தமிழரின் நிலத்தில் சிவன் கோவிலை கட்டிக் கொடுக்க பௌத்த பிக்குகள் யார்? அவர்களுக்கு என்ன உரித்து உள்ளது? குருந்துமலை தொல்பொருள் இடம் என்று அடையாளமிடப்பட்டுள்ள இடமே தவிர அது இன்று வரை விகாரை என்று குறிப்பிடப்படவில்லை.

அவ்வாறான இடத்தில் தொல்பொருள் இருந்தால், எவ்வாறு சிவாலயத்தை அமைக்க முடியும்? அதற்கு தொல்பொருள் திணைக்களம் எவ்வாறு அனுமதிக்கும்? இந்த இடத்தில் சிவாலயத்தை அமைத்துக் கொடுத்தால், தமிழர்கள் குருந்தி விகாரையை அமைப்பதை தடுக்க மாட்டார்கள், தடுக்க முடியாது. அதனால் தான் இந்த உத்தி.


நீதிமன்ற தடை உத்தரவை தளர்த்துவதற்கான ஒரு உபாயம். அதைவிட, பிரதான பௌத்த பீடங்களின் அனுமதியின்றி, எந்தவொரு விகாராதிபதியும் தனித்து முடிவெடுக்க முடியாது.

உண்மையிலேயே புராதன முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அது இருந்தால் அங்கு சிவாலயத்தை அமைப்பதற்கு (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழி லில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இரு ப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிக ரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களு க்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.




ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீக த்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்கு தாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்ட த்தை செயல்படுத்துவீர்கள். உத்யோ கஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாக லாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! குடும்ப த்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இரு ந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்று மையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.




கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியா பாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னி ன்று தீர்த்து வைத்து தொழிலை செவ் வனே நடத்தி விடுவீர்கள். உத்யோக ஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்பு ண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.




சிம்மராசி அன்பர்களே! மாற்ற ங்கள் வரும். தொழில் வியா பாரம் திருப்திகரமாக இருக் கும். வங்கி மற்றும் நிதி நிறுவ னங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலு வையில் இருந்த சலுகைகள் கிடைப்ப தற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங் களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளி நாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப் போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிரு க்காது.





துலாம்ராசி அன்பர்களே! வாழ் வின் முன்னேற்றத்திற்கான வழிகள் பிறக்கும். தொழில் – வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக் கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ் தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக் கிடையே சுமூகமான உறவு இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! மற்ற வர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோக மாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதி காரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.







தனுசுராசி அன்பர்களே! மனதி ற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்து வம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்து வது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.




மகரராசி அன்பர்களே! உங்க ளின் வெற்றிக்கு வழிகாட்டுதல் கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொ ருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள் வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.




கும்பராசி அன்பர்களே! உடனிரு ப்பவர்கள் உதவிகரமாக இருப் பர். தொழிலில் இருந்த இடை யூறுகளை களைவீர்கள். தொழி லாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரி களால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறு வர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற் படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி




மீனராசி அன்பர்களே! பொருளா தாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்க லாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# சிதறடிக்கப்படும் தமிழ் கவனக் குவிப்பு

(15ம் பக்கத் தொடர்ச்சி) அமைப்பு களும் அவ்வாறு பலங்களையும், பல வீனங்களையும் வைத்துக் கொண்டு தான் கட்டியெழுப்பப்பட்டன. புனித மான கூட்டு என்று எதுவுமே இந்தப் பூமியில் கிடையாது. முழுக்க முழுக்க கொள்கை ரீதியிலான கூட்டு என்பதும் இந்த பூமியில் கிடையாது. தூய தங்க த்தை வைத்து நகை செய்ய முடி யாது. தங்கத்தை ஆபரணமாக்குவ தென்றால் அதில் செப்பைக் கலக்க வேண்டும். நாங்கள் அணியும் எல்லாத் தங்க நகைகளிலும் கலப்பு உண்டு என்ற நடைமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அரசியலுக்கும் பொருந்தும். மக்கள் இயக்கங்களுக் கும் செயற்பாட்டு இயக்கங்களுக்கும் பொருந்தும். தலைமைகள் உறுதியாக இருந்தால்சரி. ஆயிரம் ஒட்டகங்களு க்கு ஒரு சிங்கம் தலைமை தாங்கலாம். ஆனால் ஆயிரம் சிங்கங்களுக்கு ஓர் ஒட்டகம் தலைமை தாங்க முடியாது. சிங்கமாக இருப்பதா ஒட்டகமாக இருப்பதா என்பதனை தமிழ்த் தலைமைகள் தீர்மானிக்க வேண்டும். இல்லையென்றால் புதிய தலைமைகள் மேலெழ வேண்டும்.

ஏனெனில் தமிழ் மக்களின் கவனக் குவிப்பு திட்டமிட்டுச் சிதறடிக்கப்படு கிறது. தமிழ்மக்களால் ஒருமித்துப் போராட முடியவில்லை. அது அதன் எதிர்மறை விளைவாக ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள பௌத்த வாக்கு வங்கியைத் தான் வளர்க்கும். தமிழ்மக்கள் சிதறி நின்று போராடினால் அது எதிரிக்கு சேவகம் செய்யும். திரண்டு போராடினால் அங்கே அதிசய ங்களும் அற்புதங்களும் நிகழும்.

# தமிழரை பிளவுபடுத்தும் சிங்களப் பேரினவாதம்

(21ம் பக்கத் தொடர்ச்சி) குருந்து விகாரையின் விகாராதிபதிக்கு எந்த அதிகாரமும் இல்லை. பௌத்த மதகுரு மார் மாத்திரமன்றி சிங்கள பௌத்த தேசியவாதிகளும் அதற்கு இடமளிக்க வேண்டும். இதையெல்லாம் சாதாரண விடயங்களாக எடுத்துக் கொள்ள முடி யாது.

இது ஒட்டுமொத்த தமிழர்களின் எதிர் காலத்துடன் தொடர்புடைய விடயம். பௌத்த மயமாக்கலுக்கு எதிரான ஒரு பெரும் போராட்டத்தை, ஒரு சிவாலயத் துக்காக சிதைத்து விடுவதற்கு மறவன் புலவு சச்சிதானந்தன் போன்றவர்கள் துணை போகலாம்.

ஆனால், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அதற்கு இணங்குவார்களா என்பது சந்தேகம்.

# திறக்கப்படும் புதிய மோதுகளம்

(18ம் பக்கத் தொடர்ச்சி) நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக் கவும் முடியும். சினோ பெக் எரிபொருள் விற்பனையை ஆரம்பி க்கவுள்ளதாக அறிவிக்கப்பட்ட செய்தியா ளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குண வர்தன இன்னொரு முக்கிய அறிவிப்பை யும் வெளியிட்டார்.

2019 நவம்பரில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று டன் செய்து கொண்ட உடன்பாட்டு இப்போது ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அம்பாந்தோட்டையில் நாளொன்றுக்கு 42 ஆயிரம் பீப்பாய் எரிபொருளை சுத்திகரி த்து, ஏற்றுமதி செய்யும் 4 பில்லியன் டொலர் திட்டத்துக்கு, 1200 ஏக்கர் காணிகளை வழங்கும் ஒப்பந்தமே ரத்துச் செய்யப்பட்டது.

இலங்கையின் மிகப்பெரிய முதலீட்டுத் திட்டமாக அது அப்போது கொண்டா ப்பட்டது. குறித்த திட்டம் தொடர்பாக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட சிங்கப்பூ ர் நிறுவனம், நிலத்தை பொறுப்பேற்கவுமில்லை. திட்டத்தை செயற்படுத்த தொடங்கவுமில்லை. கோட் டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர், இந்திய, ஜப்பானிய முதலீட்டுத் திட்டங் களில் கை வைத்ததாலும், அதற்குப் பின்னரான ஆரோக்கியமற்ற பொருளா தார சூழல் மற்றும் நெருக்கடிகளாலும் சிங்கப் பூர் நிறுவனம் அந்த முதலீட்டைத் தொடருவதில் அக்கறையின்றி இருந்திரு க்கலாம். இப்போது அரசாங்கம் அந்த திட்டத்தை ரத்துச் செய்திருக்கிறது. இது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் முக்கியமான தோல்விகளில் ஒன்று.

சீனாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பயணம் மேற்கொள்ளும் போது, அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கலாம் என்று கருதப் படுகிறது.

அதற்காகவே சிங்கப்பூர் நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் மீளப் பெறப்பட்டதா என்ற கேள்விகளும் உள்ளன. எவ்வாறா யினும், ஒரு பக்கத்தில் திருகோண மலையை எரிபொருள் கேந்திரமாக்க இந்தியா முயற்சிக்கின்ற நிலையில் அரசாங்கம் இன்னொரு பக்கத்தில் சீனா வுக்கான கதவுகளை திறக்கிறது. இது பிராந்தியத்தில் போட்டியை ஏற்படுத் துமா? பூசல்களை விரிவுபடுத்துமா? என் பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# கொழும்பில் கஜேந்திரகுமாரின் வீட்டை முற்றுகை

(5ம் பக்கத் தொடர்ச்சி) பௌத்தர்களுக்கு இந்த நாடகத்தை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. தமிழ் அடிப்படைவாதிகளின் நாடகத்துக்கு இடமளித்தால் பௌத்தர்களின் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும். பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டு அரசாங்கம் கோழைத்தனமாக இருக்கலாம். ஆனால் பௌத்தர்கள் கோழைத்தனமாக இருக்க மாட்டார்கள்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொள்ளுப்பிட்டியில் வாழ்கிறார். அவரின் தந்தையும் கொழும்பில் வாழ்ந்தார். அவரது பாட்டனாரும் கொழும்பில் வாழ்ந் தார். இவர் கொழும்பில் வாழ்ந்து கொண்டு விடுமுறை நேரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சென்று இனவாதத்தை பரப்பி அதனூடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி சுகபோகமாக வாழ்க்கையை வாழ்கிறார்.

அவர் கொழும்பில் வாழ்வதற்கு எவரும் இடையூறு விளைவிக்கவில்லை. அவரது பரம்பரைக்கும் எவரும் இடையூறு விளைவிக்கவில்லை. கொழும்பில் உள்ள இந்து கோயில்களு க்கு நாங்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகிறோம். கொழும்பில் இருந்து கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் களை இனவாத செயற்பாடுகளில் ஈடுபட தூண்டிவிடும் வரிசையில் பொன்னம் பலம், சுமந்திரன், சம்பந்தன் உள்ளிட்ட அனைவரும் உள்ளடங்குகிறார்கள். தெற்கில் இவர்கள் வாழ்வதற்கு உள்ள சுதந்திரத்தை வடக்கில் சிங்களவர்களிட மிருந்து பறிப்பதற்கும் தடையேற்படுத்துவதற்கும் இவர்களுக்கு தார்மீக உரிமையில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும். அந்த கோரிக்கையை முன்வைக்க எமக்கு உரிமை உண்டு. ஆகவே சிங்களவர்கள் உரிமைகளை வென்றெடுக்க இந்த வாரம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் வசிக்கும் வீட்டின் முன்பாக ஆரப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# 13வது திருத்த அமுலாக்கத்தை வலியுறுத்துவதே சிறந்தது!

## தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளிடம் அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு!

இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தைப் பொறுத்தமட்டில், இதனை யதார்த்த பூர்வமாக அணுக வேண்டியது அவசியம் எனவும், அரசியலமைப்பு சார் மாற்றங்களுக்கான சாத்தியப்பாடுகள் எவையும் இல்லாத நிலையில் 13 ஆவது திருத்தத்தின் முழுமையான அமுலாகத்தை வலியுறுத்துவதே சிறந்தது என்றும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாரம் வடமாகாணத்துக்கு விஜயம் மேற் கொண்டிருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்குக்கும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 23 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள ஃபொக்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகி சுமார் ஒரு மணிநேரம் வரை நீடித்த இச்சந்திப்பில் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் சார்பில் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடமாகாணசபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் பற்றிய நிலைப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்பிய அமெரிக்கத் தூதுவருக்குப் பதிலளித்த தமிழ்த்தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள், 'தமிழர் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக நாம் 13 ஆவது திருத்தத்தைக் கருதவில்லை.

இருப்பினும் தற்போது அதுவே அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக அத்திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் பட





வேண்டும் என்று வலியுறுத்துகின் றோம். ஆனால் 13ஆம் திருத்த அமுலா க்கம் தொடர்பில் இத்தனை பரபரப்பு அவசியமற்றதொன்றாகும்.

இதனை முழுமையாக அமுல்படுத்துவதை இலக்காகக் கொண்டு மாகாண சபைத்தேர்தல்களை நடாத்த வேண்டுமெனில், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணையை நிறைவேற்றினால் போதுமானதாகும். எது எவ்வாறெனினும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை வேறெந்தத் தேர்தலும் நடாத்தப்படமாட்டாது என்றே நாங்கள் கருதுகின்றோம்' என்று குறிப்பிட்டனர்.

அதனை செவிமடுத்த தூதுவர் ஜூலி சங், இவ்விடயத்தை யதார்த்தபூர்வமாக சிந்தித்து அணுகவேண்டும் என்று சுட்டிக் காட்டியதுடன் தற்போது அரசியலமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படக்கூடிய சாத்தியம் இல்லை என்றும், எனவே 13 ஆவது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கத்தை வலியுறுத்துவதே சிறந்தது என்றும் தெரிவித்தார்.

அதேபோன்று வட, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணி அபகரிப்பு மற்றும் காணி விடுவிப்பு நெருக்கடிகள் குறித்து அமெரிக்கத்தூதுவரிடம் விரிவாக எடுத்துரைத்த தமிழ்ப்பிரதிநிதிகள், குறிப்பாக குருந்தூர் மலை விவகாரம் உள்ளடங்கலாக வடக்கில் நிகழும் பௌத்த விகாரை கட்டுமானங்கள், சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புக்கள் என்பன பற்றிப் பிரஸ்தாபித்தனர். அதுமாத்திரமன்றி இவை சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வலுப்படுத்துவதுடன் தமிழ்மக்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரிக்கும் நோக்கிலேயே முன்னெடுக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டிய அவர்கள், இவற்றின் மூலம் மிகமோசமான இனக்கலவரம் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படுவதாகவும் அச்சம் வெளியிட்டனர். அதற்குப் பதிலளித்த தூதுவர் ஜூலி சங், மதரீதியான அடக்குமுறைகள் மிகவும் தவறானவை என்றும், தவிர்க்கப்பட வேண்டியவை என்றும் கூறியதுடன் 'இவ் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், இந்தியாவிலிருந்து வருகைதந்த இந்துத்துவக்குழுக்கள் தலையிடுகின்றனவா?' என்று கேள்வி எழுப்பினார். அது குறித்துத் தாம் எதனையும் அறிந்திருக்கவில்லை என்று பதிலளித்த தமிழ்ப் பிரதிநிதிகள், அத்தகைய சம்பவங்கள் இடம்பெறுமாயின் அவை சிங்கள பௌத்த பேரினவாதிகளாலேயே தூண்டப்படுவதாகவும் சுட்டிக் காட்டினர்.

மேலும் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ள விடயங்களை அரசாங்கம் நடைமுறைப் படுத்தாமல் தட்டிக்கழித்து வருவதாகவும், எனவே இச்செயன்முறையில் தமிழ்மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதாகவும் தூதுவரிடம் தெரிவித்த அவர்கள், எனவே மேற்படி தீர்மானத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினர்.

அத்தோடு பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்கவேண்டியதன் அவசியம், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலத்தின் பாதகமான தன்மை, மருத்துவர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுனர்கள் மற்றும் புத்திசாலிகளின் வெளியேற்றம் போன்ற விடயங்கள் பற்றியும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அமெரிக்கத் தூதுவருடன் கலந்துரையாடினர்.

